www.tamilarangam.net

# இலக்கு




தமிழீழ தேசிய விடுதலை முன்னணியின்
அரசியல் தத்துவார்த்த விமர்சன ஏடு

கலை — 6 சித்திரை — வைகாசி 1985

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**வெகுஜனத் தொடர்பு என்பது**
**வெடிகுண்டுகளைக் காட்டிலும் வலிமையானது.**

## ஓர் அறிவித்தல்

கடந்த சித்திரை 1985 தளிர் இதழில் எமது ஸ்தாபனத்தின் பெயரில் ஒரு கட்டுரை பிரசுரிக்கப் பட்டுள்ளது. இக் கட்டுரைக்கும் எமக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்பதை தெரிவித்துக் கொள்ளுகின்றோம். எமது பெயரால் தங்களது கருத்துக்களை வெளியிட்ட இச்செயல் எமது அமைப்பினரையும், ஆதரவாளர்களையும், பொது மக்களையும் குழப்பத்திற்குள்ளாக்கி உள்ளது. இச்செயலை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். இத்தகைய தவறான செயல்கள் எதிரிக்கு சாதகமான விளைவையே ஏற்படுத்தும் என்பதையும் கூறிக் கொள்கின்றோம். O

**அன்பளிப்பு: ரூபா 3-50**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இலக்கு

## மக்கள் படையில்லையேல் மக்களுக்கு எதுவுமே இல்லை

நெருக்கடிக்கும், சிக்கலிற்கும் உள்ளாகியிருக்கும் தமிழீழப் போராட்டத்தை எவ்வாறு சரியான திசைவழியில் முன்னெடுப்பதென்பதை ஒவ்வொரு போராளியும் சிந்திக்க வேண்டிய நிலை உருவாகியுள்ளது. நாமும் கடந்த காலப் போராட்ட அனுபவங்களை தொகுத்து ஆய்வு செய்வதன் மூலமே சரியான திசைவழியில் போராட்டத்தை முன்னெடுக்க முடியும்.

எமது போராட்டம் மக்கள் போராட்டமாக அமையும் பட்சத்தில் மாத்திரம் தான் நாம் உண்மையான விடுதலையை எய்த முடியும். அப்படியமையாத பட்சத்தில் நாம் தேவையற்ற தியாகங்களைச் செய்வதுடன் பாரிய அழிவுகளையும், பின்னடைவுகளையும் எதிர்கொள்ள வேண்டி வரும். எமது போராட்டம் நன்மையான அம்சங்களை விட பாரிய அழிவுகளையும் இழப்புக்களையும் தான் அதிகமாகத் தந்துள்ளது. இவற்றிலிருந்து நாம் சரியான போராட்டப் பாதையை வகுத்துக் கொள்வதாயின் இன்றைய சமூக-பொருளாதார நிலை, அரசியல் சூழல் என்பவற்றைச் சரியாக ஆய்வுசெய்து கொள்வதன் மூலமே இது சாத்தியமாகும். இவ்வாறு ஆய்வு செய்ததன் அடிப்படையிலேயே எமது இராணுவ யுத்த தந்திரம் மக்கள் யுத்தப்பாதை என்று முன்னைய இலக்கு இதழ்களில் முன்வைத்திருந்தோம்.

மக்கள் யுத்தமென்பது பொது மக்களின் யுத்தம். பொதுமக்களைச் சார்ந்திருந்து அவர்களை அணிதிரட்டி தட்டியெழுப்புவதன் மூலமே மக்கள் யுத்தத்தை முன்னெடுக்க முடியும். மக்கள் யுத்தத்தை முன்னெடுப்பதற்கு மக்கள்படை அவசியமாகும். மக்கள் படையில்லையேல் மக்கள் யுத்தம் என்ற சொல் அர்த்தமிழந்துவிடும்.

மக்கள் போராட்டம் என்று சொல்லும் போது ஆயுதமேந்திய மக்கள் போராட்டத்தையே இங்கு நாம் குறிப்பிடுகின்றோம். இவ்வாயுதமேந்திய போராட்டத்தை முன்னெடுக்கும் மக்கள் படையானது வெறுமனே ஆயுதமேந்திப் போராடுவதுடன் மட்டும் நிற்பதில்லை. இதற்கு ஒவ்வொரு காலகட்டத்திலும் பல்வேறு கடமைகளுண்டு. மக்கள் படை என்பது பொதுமக்களைச் சார்ந்தது; மக்கள் நலனையே அடிப்படையாகக் கொண்டது. இதற்கு மக்கள் மீதான நம்பிக்கையும், இலட்சியத்தின் மீதான கொள்கைப்பிடிப்பும் போராட்ட உறுதியுமுள்ளதாலேயே இது வெற்றிகளை ஈட்டக் கூடியதாகவுள்ளது. இப்படை விடுதலைப் போராட்டத்தில் பொதுமக்களை அணிதிரட்டி உணர்வுபூர்வமாகப் பங்குபற்ற வைப்பதற்கு அயராது உழைக்கும். இந்த சமூகத்தை மாற்ற வேண்டியதன் அவசியத்தைப் பிரச்சாரப்படுத்தி மக்களை தமது பிரச்சனைகளுக்காகப் போராடவைப்பதுடன் தேசிய விடுதலைப் போராட்டத்தை மக்கள் ஜனநாயகப் புரட்சியாக முன்னெடுக்கும் பணிகளை நிறைவேற்றும் கடமையையும் மேற்கொள்ளும். மக்களை அரசியல் மயப்படுத்தி போராடவைத்தல் என்ற வகையில் மக்களை அணிதிரட்ட அயராதுழைப்பதுடன் சிறுசிறு போராட்டங்களில் மக்களை ஈடுபடுத்தி அவ்வனுபவங்களிலிருந்து கற்றுக்கொண்டு நீண்டகாலப் போராட்டத்தில் தாக்குப் பிடிக்கக் கூடியதாக இது விளங்கும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

படையில் சேர்க்கப்படும் ஒவ்வொருவரும் மக்களை நேசிப்பவர்களாகவும், மக்களின் அபிலாஷைகளைப் புரிந்துகொள்ளக் கூடியவர்களாகவும், மக்களிடமிருந்து கற்றுக்கொண்டு தம்மை வளர்த்துக் கொள்பவர்களாகவும் இருத்தல் வேண்டும். இத்துடன் பொது மக்களின் நல்வாழ்வில் அக்கறை காட்டுவதுடன் அன்றுடப் பிரச்சினைகளுக்காக அவர்களைப் போராட ஊக்குவிக்கும். இப்படியாகப் பொதுமக்களின் வாழ்க்கையுடன் இரண்டறக் கலப்பதன் மூலமே உண்மையான மக்கள் படையாக விளங்கி மக்கள் யுத்தத்தை முன்னெடுக்கும் படையாக இருக்கும்.

மக்கள் படையானது எப்போதும் தம் சொந்தப் பலத்தில் நம்பிக்கை கொண்டதாயும், விடாமுயற்சியும் உறுதியும் கொண்டதாகவும் இருப்பதுடன் நீண்டகாலப் போராட்டத்திற்குத் தயாராயும் இருக்கும். நீண்ட காலக் கண்ணோட்டத்தில் நாளாந்த நடவடிக்கைகளில் பொறுமையையும், நிதானத்தையும் கடைப்பிடித்து சரியான நடைமுறைத் தந்திரங்களை வகுப்பது அவசியமாகும்.

விடுதலைப் போராட்டத்தில் தீவிரமாக ஈடுபடும் மக்கள் படையானது விடுதலைக்குப் பின் உற்பத்தி நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டு நாட்டை நிர்மாணிப்பதில் பெரும் பங்காற்றும். இக் கடமைகளை வெற்றிகரமாகச் செய்யக்கூடிய வகையில் ஆரம்பத்தில் இருந்து மக்கள் படை ஒழுங்காகக் கட்டப்படல் அவசியமாகும்.

ஒரு சிறந்த இராணுவ வீரன் சிறந்த அரசியல் வழிகாட்டியாகவும் இருப்பது அவசியமானது. தான் எதற்காகப் போராடுகிறேன் என்பதில் பூரண தெளிவைப் பெறுவதற்கு விஞ்ஞான பூர்வமான சமூகப் பார்வை அவசியமாகும். தான் வாழும் சமூகம், அதன் பொருளாதார அடிப்படை, சமூகப் பிரிவுகள் (வர்க்கங்கள்) மற்றும் சர்வதேச அரசியல் நிலை என்பவை பற்றி புரிந்து கொள்ளல் ஒவ்வொரு இராணுவ வீரனிற்கும் தேவையானதாகும்.

ஒரு போராட்டத்தின் வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதில் முதன்மையான அம்சமாக உள்ளது அரசியல் மார்க்கம் தான் என்ற வகையில் இராணுவ வீரன் சரியான அரசியல் மார்க்கத்தைப் பற்றிக் கொள்ள வேண்டியது அவசியமாகும். அரசியல் மார்க்கம் தவறுனதாயின் ஏனைய அம்சங்கள் சரியானவையாக இருப்பினும் கூட குறித்த இலக்கையடைய முடியாது போய்விடும். எனவே அரசியலை முதன்மையில் வைத்தல் என்பதை மக்கள் படை உயர்த்திப் பிடித்தல் அவசியமானது. இராணுவம் என்பது ஒரு இயக்கத்தின் அரசியற் கடமைகளை நிறைவேற்றும் சாதனம் என்ற வகையில் அது அரசியலுக்குக் கட்டுப்பட்டதாய் இருத்தல் இன்றியமையாதது. இராணுவத்தில் அரசியல் தலைமை தாங்குவதற்குப் பதில் ஆயுதம் தலைமை தாங்குமாயின் எப்படியான விபரீதங்கள் நிகழும் என்பதற்கு உலக வரலாற்று அனுபவங்கள் சிறந்த படிப்பினைகளாக உள்ளன. இப்படி அரசியற் தலைமை அற்ற இராணுவங்கள் எதேச்சாதிகார, பாசிசத் தன்மை கொண்ட இராணுவமாக உருவெடுக்குமென்பதில் ஐயமில்லை.

ஒரு படை வெற்றியை நோக்கி முன்னேறுவதற்கு சிறந்த அரசியற் திட்டம் மட்டும் போதாது; அதற்கான சிறந்த இராணுவத் திட்டமும் தேவை. சிறந்த இராணுவத் திட்டம் என்பது நீண்டகால மக்கள் யுத்தத்தை எமது நாட்டுச் சூழலில் முன்னெடுப்பதற்கான திட்டமே. இராணுவத் திட்டமானது தற்காப்பு, தாக்குதல், நேரடி உள்நாட்டு யுத்தம் என்ற இறுதி நிலை வரைக்குமான மூன்று கட்டங்களுக்கும் ஏற்றவிதமான படைகட்டல், இராணுவ நடவடிக்கை செய்தல் என்பதை உள்ளடக்கியதாகவிருக்கும்.

எமது போராட்டத்தில் பல்வேறு இயக்கங்களும் கொண்டுள்ள இராணுவங்களானவை மக்கள் இராணுவமாக இல்லை என்பதை அவற்றின் நடவடிக்கைகள் எடுத்துக் காட்டுகின்றன. சில வெறும் ஆயுதக் கவர்ச்சியிலும், வீரதீரச் செயல்களிலும்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

குறுகிய கால வெற்றி பற்றிய நம்பிக்கையடிப்படையிலும் இன்னும் சில கூலிப் படைத் தன்மையான நிரந்தரப்படை வடிவிலும் படைகளைக் கட்டின. இவை எதுவுமே விடுதலை பற்றிய சரியான தெளிவைப் படைகளுக்குக் கொடுக்கவில்லை. இதனால் படைகளிடையே நீண்டகாலப் போராட்டத்திற்குத் தயாரின்மையாக இருப்பதுடன் எதிரி பற்றிய சரியான கணிப்பீடின்றி நடவடிக்கைகளில் ஈடுபடும் போக்கும் காணப்படுகிறது. சில தமது சொந்தப் பலத்தில் நம்பிக்கை வைப்பதைவிட வெளி சக்திகளில் கூடுதல் நம்பிக்கை வைக்கும் போக்கும் காணப்படுகின்றது. மொத்தத்தில் இவை உண்மையான மக்கள் படையாகத் தம்மை வளர்த்துக் கொள்ளவில்லை. இப்படைகளைப் பார்த்து இன்று மக்கள் அச்சம் கொள்ளும் அளவிற்கு நிலைமை மோசமாகி உள்ளது.

இன்று தடியெடுத்தவன் தண்டல்காரன் என்ற வகையில் ஆயுதம் எடுத்தவர்கள் யாவரும் எஜமானர் என்ற நிலை உருவாகின்றது. கட்டுப்பாடு, ஒழுங்கு, என்பன இல்லாததால் தன்னிச்சைப் போக்கு, அராஜகம் என்பன வளர்ந்துள்ளது. இந்நிலை தொடருமாயின் அவை எதிர்காலத்தில் மக்கள் விரோதியாக மாறுவதும் தவிர்க்க இயலாததாகி விடலாம்.

எனவே இவற்றை உணர்ந்து கட்டுப்பாடு, ஒழுங்கு என்பவற்றுடன் சரியான அரசியல் தெளிவும் மக்கள் நலன் பேணுவதுமான ஒரு மக்கள் படையைக் கட்டுவதே இன்றைய தேவையாகும். இப்படியான மக்கள் படையைக் கட்டாவிடின் மக்கள் போராட்டத்தைச் சரியான திசைவழியில் முன்னெடுக்க முடியாது போய்விடும். மக்களுக்கு விடிவு தேவையாயின் மக்கள் படை அவசியம். மக்கள் படை இல்லையேல் மக்களுக்கு எதுவுமே இல்லை.

*"கட்சி துப்பாக்கி மீது ஆணை செலுத்துகிறது. கட்சி மீது துப்பாக்கி ஆணை செலுத்துவதை ஒரு போதும் அனுமதிக்கக் கூடாது. இதுவே நமது கோட்பாடு."* O

## சிங்கள அரசின் இனஒதுக்கல்

*இலங்கையின் வரவு செலவு திட்டத்தைப் பார்க்கும் போது 1982 இன் பரவலாக்கப்பட்ட வரவு செலவு திட்டத்தில் ரூபா 27 மில்லியன் மட்டும் யாழ்ப்பாணத்திற்கு ஒதுக்கப்பட்டது. 1981 இன் மத்திய வரவு செலவுத் திட்டத்தின் படி யாழ்ப்பாணத்தின் மொத்த செலவினம் ரூபா 260 மில்லியன் ரூபாவாகும். இது நாட்டின் மொத்த செலவினமான ரூபா 9 பில்லியனின் (Billion) 2.6 வீதம் மட்டுமே. யாழ்ப்பாணத்தின் சராசரி தலா செலவினம் ரூபா 313 ஆக இருக்கும் போது தேசிய தலா செலவினம் ரூபா 656 ஆக உள்ளது. 1977 இற்கும் 1982 இற்கும் இடைப்பட்ட காலத்தில் எந்த வெளிநாட்டு உதவியும் யாழ்ப்பாணத்தின் அபிவிருத்திக்குப் பயன்படுத்தப்படவில்லை.*

ஆதாரம் — FRONTLINE [INDIA]
MARCH 23 - APRIL 5 - 1985



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நல்ல தலைவர் ஆவது எப்படி

### I. தலைவருக்குரிய வரைவிலக்கணம்:

ஒவ்வொரு ஊழியரும் ஏதாவதொரு சமயத்தில் தலைமை ஏற்று நடத்த வேண்டியிருக்கும். பெரும்பாலும் ஏற்கனவே தலைமைப் பொறுப்பை வகித்துக் கொண்டிருக்கலாம். எனவே தலைமை ஏற்று நடத்தும் பணி எல்லா மட்டத்திலும் உள்ள தலைமை ஊழியர்களுடன் சம்பந்தப்பட்டது. அவர்கள் அக்கறை கொள்ள வேண்டிய ஒன்று.

ஹோங்கியான், ஜெங்ஜியான் ஆகிய தலைமை அலுவலகங்களில் உள்ள எல்லா அலுவலக ஊழியரிடையே செய்யும் வேலையின் தன்மையில் தான் வேற்றுமை இருக்கின்றதே தவிர தலைவர்கட்கும் அவரைப் பின்பற்றுவோருக்கும் இடையே எந்தவித ஏற்ற தாழ்வும் கிடையாது. இன்றும் ஊழியருக்கும் (**Caders**) ஊழியரல்லாதோருக்கும் (**Non Caders**) இடையே வேறுபாடு மிகவும் குறைவாகவே காணப்படும். மேற்கூறிய அலுவலங்களிலும் **NewChinaDaily** (புதிய சீன தினசரி) பத்திரிகை அலுவலகத்திலும் பணிபுரியும் தோழர்கள் நேரடியாக தலைமைப் பொறுப்பு எதையும் ஏற்காவிட்டாலும் அவர்களும் தலைவர்களே.

### II. ஒரு தலைவர் எடுக்க வேண்டிய நிலை:

தான் செய்யும் ஒவ்வொரு பணியிலும் கட்சியின் நிலை என்ன என்பதில் இருந்தே ஒவ்வொரு தலைமை ஊழியரும் தன் பணியை அணுகத் தொடங்க வேண்டும். இது ஒரு பொதுக் கூற்று. குறிப்பாகச் சொன்னல் ஒரு தலைமை ஊழியருக்கு கீழ்க்காணும் பண்புகள் இருக்க வேண்டும்.

(1) உறுதியான மார்க்சிய-லெனினிய உலகக் கண்ணேட்டமும், வாழ்க்கை பற்றிய புரட்சிகரக் கண்ணேட்டமும்.

(2) கொள்கைப் பற்றுதல்.

(3) மக்கள் பலத்தில் நம்பிக்கை.

(4) கற்றலில் பற்றுதல்.

(5) விடாப்பிடியாக போராடும் மனத்திடம்.

(6) மிக உயர்ந்த கட்டுப்பாட்டுணர்வு.

### III. தலைவர்களும் தலைமை அமைப்புகளும்:

(1) கூட்டுத் தலைமையும் ஒரு மட்டத்தில் உள்ளவர்களை அதைவிட நேர் மேலே உள்ள தலைமை வழிநடத்திச் செல்லும். - ஒன்றுபட்ட தலைமை, மையயப்படுத்தல், ஜனநாயகம். (விவாதமும், வேலைகளைப் பகிர்ந்திடலும்.)

(2) தனிநபர் பொறுப்பும் தனி நபர் தலைமையும்:- மிகப் பெரிய போரணிகட்குப் பின்னுள்ள பகுதியில் இது முக்கியமாகத் தேவை. அதே சமயம் கூட்டுத் தலைமையை நிராகரிப்பதாகவும் இருக்கக் கூடாது.

(3) மேல்மட்டத் தலைமை நேரடியாக நேர்முகத் தலையிடுதலும், முடிவெடுத்தலும்:- சாதாரணமாக இது நடைமுறையில் இல்லை என்ருலும் விசேட சூழ்நிலையிலோ உதாரணங் காட்டவோ தேவைப்படும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## IV. சரியான தலைமை என்றால் என்ன?:

ஸ்டாலின் ஒரு காலத்தில் குறிப்பிட்ட மூன்று அம்சங்களை இப்பொழுது விவரிக்கின்றேன்.

(1) முடிவுகள் சரியானவையாக இருக்க வேண்டும். முதலாவதாக, தலைவர்கள் நிலைமையை மதிப்பீடு செய்ய வேண்டும். நிலைமையில் என்ன என்ன மாறுதல்கள் நிகழக்கூடும் என்பதை கணிக்க வேண்டும். ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் நிலவக்கூடிய விசேஷ தன்மைகளை அலசி ஆராய வேண்டும். இரண்டாவதாக, மேற்கூறியவற்றை கட்சியின் பொதுக் கடமையுடன் சம்பந்தப் படுத்திப் பார்த்து குறிப்பிட்ட காலகட்டத்திற்கான கொள்கையையும் கடமையையும் நிர்ணயிக்க வேண்டும். மூன்றாவதாக இந்தக் கொள்கைக்கு ஏற்றவாறு நிலவும் நிலைமைக்குத் தக்க நடைமுறைத் தந்திரங்களையும் முழக்கங்களையும் (**Slogans**) உருவாக்க வேண்டும். நான்காவதாக, இதன் பின்னர் நடைமுறைச் சாத்தியமான திட்டங்களையும் ஆணைகளையும் உருவாக்க வேண்டும். நிலவும் நிலைமைகளை நன்கு ஆழமாக விசாரித்து ஆராய்ந்து கட்சிக் கொள்கைளுடன் பலன்களை இணைத்துப் பார்த்து முடிவுகள் எடுக்க வேண்டும்.

(2) எடுத்த சரியான முடிவுகளைச் செயற்படுத்த வேண்டும். முதலாவதாக, திட்டத்தைச் செயற்படுத்தவும் ஆணைகளை நிறைவேற்றவும் என்ன என்ன வழிகள் இருக்கின்றன என்பதைப் பற்றி விவாதிக்க தலைவர்கள் ஏற்பாடு செய்ய வேண்டும். இரண்டாவதாக, திறமையானவர்களை மிகக் கவனமாகத் தேர்ந்தெடுத்து திட்டத்தைச் செயற்படுத்தும் பொறுப்பில் அவர்களை அமர்த்த வேண்டும். மூன்றாவதாக, கட்சியின் திட்டம் நிறைவேற முயற்சிகளை ஒழுங்கு படுத்த வேண்டும். நான்காவதாக, தாங்களே செயற்படுத்தும் பணிகளில் பங்கெடுத்து உதாரணமாக விளங்க வேண்டும். அவ்வாறு செய்வதால், கட்சியின் செயற்திட்டமும் யுக்திகளும் சரியானவையா அல்லது மாற்றியமைக்கப்பட வேண்டுமா என்பதை நடைமுறை அனுபவத்தின் மூலம் கண்டறிய முடியும்.

(3) முடிவுகள் எவ்வாறு செயற்படுத்தப்பட்டன என்பதைப் பரிசீலனை செய்ய வேண்டும். பரிசீலனை செய்வதற்கான முறைகளாவன.

(அ) வெறும் வாக்குறுதிகளைக் கணக்கிலெடுக்காமல் கண்கூடாக அறியக்கூடிய சாதனைகளைக் குறித்துக் கொள்ள வேண்டும்.

(ஆ) ஏட்டளவில் நிற்கும் திட்டங்களை மட்டும் கணக்கில் எடுக்கக் கூடாது. இடப்பட்ட பணிகள் சிரத்தையுடன் ஆற்றப் படுகின்றனவா அல்லது வெறும் கடனுக்குச் செய்கிற மாதிரி உள்ளனவா என்பதை அறிய வேண்டும்.

(இ) வடிவத்தை விட உள்ளடக்கத்திற்கே முக்கியத்துவம் தர வேண்டும். எடுத்த முடிவு உண்மையாகவே சரியாக செயற்படுத்தப் படுகின்றதா அல்லது திரிக்கப்பட்டு தவறான வழியில் செயற்படுத்தப் படுகின்றதா என்பதை ஆராய வேண்டும்.

(ஈ) மேலிடத்தில் இருப்பவர்கள் கீழிருப்பவர்களின் பணிகளை பரிசீலனை செய்வது போல் கீழிருப்பவர்களும் மேலிடத்தில் இருப்பவர்களின் பணிகளைப் பரிசீலனை செய்ய வேண்டும்.

(உ) பரிசீலனை காலந் தவறாது ஒழுங்காக முறைப்படி மேற்கொள்ளப்பட வேண்டும்.

(ஊ) பரிசீலனை நடத்துவதில் தலைவர்கள் நேரடியாக பங்கு கொள்ள வேண்டும்.

ஸ்டாலின் சொன்னது போல் தலைவர்கள் மக்கள் திரளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருக்க வேண்டும். தலைவர்கள், மக்கள் திரள் ஆகிய இருபாலாரின் அனுபவங்களையும் ஒன்று சேர்த்து இணைக்க



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வேண்டும். அப்பொழுது தான் சரியான தலைமையாக இருக்க முடியும்.

## V. தலைவர்களின் கடமைகள்:

ஊழியர்களை நல்ல முறையில் பயன் படுத்தி கட்சிக் கொள்கையை செயற்படுத்துவதே தலைவர்களின் கடமை என்று தோழர் மாசேதுங் கூறியுள்ளார். இது உண்மை. தலைவர்களின் கடமைகளை கீழ் வரும் கூறுகளாகப் பிரிக்கலாம் என்று நான் கருதுகின்றேன்.

(1) தலைமை ஊழியர்கள் சித்தாந்த ரீதியிலும், அரசியல் ரீதியிலும் தலைமை வகிப்பதற்கு மிக ஆழ்ந்த கவனம் செலுத்த வேண்டும். இதற்கு அவர்களே இடைவிடாது தங்கள் சித்தாந்த அறிவை உயர்த்திக் கொள்ள வேண்டும். அரசியற் பயிற்சியையும் பலப்படுத்திக் கொள்ள வேண்டும். நம் தோழர்கள் கீழ்க்காணும் அம்சங்களில் தங்கள் கவனத்தை ஒருமுகப் படுத்த வேண்டும் என்று நாம் வலியுறுத்த வேண்டும்.

(அ) முக்கியமான விடயங்களுக்கு அழுத்தம் தர வேண்டும்.

(ஆ) அரசியல் விழிப்புணர்வை கூர்மையாக்க வேண்டும்.

(இ) தங்கள் சித்தாந்த அறிவை உயர்த்திக் கொள்ள வேண்டும்.

(ஈ) கட்சிக்குள்ளேயும் வெளியேயும் சித்தாந்தப் போராட்டத்தை தீவிரமாக்க வேண்டும்..

(உ) கட்சியின் கொள்கையையும் சாதனைகளையும் முனைப்புடன் பரப்ப வேண்டும்.

(2) தலைமை ஊழியர்கள் ஸ்தாபனத் தலைமை வகிப்பது பற்றி கவனமாகச் சிந்திக்க வேண்டும். அரசியல் திட்டம் வகுத்ததும், ஸ்தாபன வேலையே வெற்றி தோல்வியை நிர்ணயிக்கின்றது. தோழர்களின் கவனத்தை கீழ் குறிப்பிட்டுள்ள அம்சங்களின் மீது ஈர்க்கின்றேம்.

(அ) ஸ்தாபனத் தலைமையின் சிறப்பு அரசியற் தலைமையின் சிறப்பிற்கு ஈடாக உயர்த்தப்பட வேண்டும். வேறு விதமாகக் கூறினால், அரசியற் கடமைகளுடன் இணைந்த வண்ணம் கொள்கை அடிப்படையிலேயே எல்லாப் பணிகளும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

(ஆ) எல்லா ஸ்தாபனப் பணிகளும் அன்றாட வேலைகளும் கட்சியின் அரசியற் கடமைகள் நிறைவேற்றப்படுவதையும் கட்சியின் செயற் திட்டங்கள் நிறைவேற்றப்படுவதையும் உறுதி செய்யும் வகையில் செயலாற்றப்பட வேண்டும்.

(இ) கட்சி ஸ்தாபனங்கள் கீழ் மட்டத்தில் உள்ள ஊழியர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருப்பதை உறுதி செய்யவும், அவர்களின் வேலை மேலும் மேலும் அதிகமாக எளிதில் கண்கூடாக உணரக் கூடிய வகையில் நடக்கவும் கட்சித் தலைமையின் அன்றாடப் பணிகட்கு முக்கியத்துவம் தரப்பட வேண்டும்.

(ஈ) எல்லா இடர்களையும் வெல்ல முயற்சிகள் மேற்கொள்ளும்படியாக கட்சி ஸ்தாபனங்களும் மக்கட் திரளும் ஒன்று திரட்டப்பட வேண்டும்.

(உ) கடனுக்கு வேலை செய்தல், வாய்ச் சவடால், அகங்காரம், அதிகார வர்க்க மனப்பாங்கு, சடங்கு முறைகளுக்கு இடம் தருவதால் ஏற்படும் காலதாமதம், சம்பிர தாயங்களுக்கு முக்கியத்துவம் அளித்தல் போன்ற சந்தர்ப்பவாத நடத்தையையும், ஊழலையும், ஒழுக்கச் சீர்கேட்டையும் எதிர்த்துப் போராட வேண்டும்.

(3) ஊழியர்களைத் தேர்ந்தெடுப்பதிலும் அவர்களுக்கு வேலைப் பொறுப்பு அளிப்பதிலும் முன்னெச்சரிக்கையுடன் விவேகமாகச் செயற்பட வேண்டும். ஸ்தாபனப் பணியின் ஒரு அம்சமே இது என்றாலும் தனியாகக் கவனம் செலுத்தப்பட வேண்டிய ஒன்று. அரசியற் தகுதி, வேலைத் திறமை இரண்டுமே ஊழியர்களைப் பொறுக்கி எடுப்பதற்கான இன்றியமையாத



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அளவு கோல்கள் என்றாலும் அரசியல் ரீதியாக நம்பகமானவர்களா என்பதே முதன்மையானது.

இக் கொள்கை அடிப்படையில் நியமனங்கள் செய்யாவிட்டால் கட்சிக்கு எத்தகைய தீங்கு விளையும் என்பதை ஸ்டாலின் சுட்டிக் காட்டியுள்ளார். இத்தகையவர்கள் தாங்கள் போகுமிடமெல்லாம் ஒரு பெரிய பட்டாளத்தையே கூட்டிக் கொண்டு போவார்கள் என்றும் தங்கள் 'சொந்த ஆட்கள்' என்று தாங்கள் கருதுபவர்களையே பணிக்கு அமர்த்திக் கொள்வார்கள் என்றும் கூறினர். 'தவறுகள் திருத்தும் இயக்கம்' பற்றிய தன் அறிக்கைகளில் ஒன்றில் மாசேதுங் இத்தகையவர்களை 'நாணயமற்றவர்கள்', 'கபடதாரிகள்' என்று கண்டித்தார். எல்லாவிடங்களுக்கும் ஓடோடிச் சென்ற பழங்கால சக்கரவர்த்தி தூதர்களுக்கு இருந்த குறைதான் இது. ஊழியர் அரசியலில் நம்பகமானவரா என்று தீர்மானித்த பின்னர் காலம், இடம், சூழ்நிலைகளுக்கு ஏற்றவாறு அவரை நல்ல முறையில் பயன்படுத்துவது மிக முக்கியமாகும்.

(4) செய்த வேலையைப் பரிசீலனைக்கு உட்படுத்த வேண்டும். வேலை செய்த ஊழியரின் சாதனையையும் செயல்திட்டம் நிறைவேற்றப்பட்டது பற்றியும் பரிசீலனை செய்ய வேண்டும். ஸ்டாலின் கூறியது போல், பரிசீலனையின் நோக்கங்களாவன: I. ஊழியரின் தகுதிகளை அறிதல், II. செயலாக்க அமைப்பின் நிறை குறைகளைத் தீர்மானித்தல், III. இட்ட பணிகள் மற்றும் கொடுத்த கட்டளைகள் சீரானவையா, குறைபாடு உடையனவா எனக் கண்டறிதல். இத்தகைய பரிசீலனையினால் தங்கள் பலவீனங்கள் வெளிப்பட்டுவிடும், தங்கள் கௌரவம் பறிபோகும் அல்லது தங்கள் தன்னம்பிக்கை ஆட்டம் கண்டுவிடும் என்று சில தலைவர்கள் அஞ்சுகின்றனர். இது தவறு. தங்கள் தவறுகளைத் திருத்திக் கொள்வதால் அன்றி மூடிமறைப்பதால் அல்ல; கடுமையான உழைப்பில் ஈடுபடுவதாலன்றி தற்புகழ்ச்சி செய்வதால் அல்ல தலைவர்களின் கௌரவம் உயரும். தவறுகளைத் திருத்திக் கொள்வதால் நம்பிக்கை வலுப்படுமே அன்றி பலவீனமடையாது. தங்கள் பெயரை எப்படியாவது காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்பதிலேயே அக்கறை காட்டும் தற்பெருமை பேசித் திரிவோர்களே தவறுகள் வெளியாவது கண்டு அஞ்சுவார்கள்.

(5) மக்கள் திரளிடம் செல்லுங்கள். தலைவர்கள் மக்களுக்கு அறிவு புகட்டுவதோடு அவர்களிடம் கற்றுக்கொள்ளவும் வேண்டும். ஏனெனில் தலைவர்களுடைய அறிவு முழுமையானதல்ல. அவர்கள் அனுபவம் போதாது. தலைமைப் பதவிகளில் இருப்பதால் மட்டுமே அறிவும் அனுபவமும் கிட்டாது. மக்களிடம் சென்று அவர்கள் அனுபவத்தில் இருந்து கற்பது மிக இன்றியமையாதது. எனவே நாங்கள் தோழர்களுக்கு கீழ்வரும் யோசனைகளைக் கூறுகின்றோம்.

(அ) மக்களிடம் செல்லுங்கள். அவர்களிடம் நெருக்கமாகத் தொடர்பு கொள்ளுங்கள். ஓரளவு அவர்களில் ஒருவராக ஒன்றி விடுங்கள்.

(ஆ) மக்கள் குரலுக்குச் செவிசாயுங்கள்.

(இ) அவர்களிடம் கற்றுக்கொள்ளுங்கள்.

(ஈ) வால்போல் அவர்கள் பின்செல்லாது அவர்களுக்குச் சரியான அறிவு கற்பியுங்கள்.

## VI. மக்களை வழிநடத்திச் செல்லலும் மக்களிடம் நட்புறவு கொள்ளலும்:

(1) கட்சி உறுப்பினர்களை வழிநடத்திச் செல்வது போல் மக்களை வழிநடத்திச் செல்ல முடியாது. மக்களை வழிநடத்திச் செல்லும் முறையும் மக்களிடம் காட்டும் மனப்பான்மையும் நாம் அவர்களுக்குத் தலைமை தாங்கி வழிநடத்துகின்றோம் என்று அவர்கள் எண்ணும்படி இருக்கக்கூடாது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

(2) மக்களுக்கு தலைமை தாங்கி வழி நடத்துவதற்கு அடிப்படையான முறை நயந்து கூறி இணங்க வைத்தலே அன்றி கட்டளை இடுவதல்லவே அல்ல. மிகவும் தேவைப்பட்டால் தவிர மற்றும் பெரும்பான்மை ஏற்றுக்கொண்டு ஒரு சிறுபான்மை மறுக்கும் பொழுதும் சிறுபான்மையினரை பெரும்பான்மையினரின் முடிவுகளுக்கும் பணிந்து நடக்குமாறு நிர்ப்பந்திக்கலாம்.

(3) மக்களுக்குத் தலைமை தாங்குவதிலும் அவர்களிடம் நட்புறவு கொள்வதிலும் தலைவர்களே முன்மாதிரியாக விளங்கவேண்டும்.

(4) தேவைப்படும் பொழுது, தாங்கள் நிந்திக்கப்பட்டாலும் நிந்தனையைப் பொருட்படுத்தாது இருக்கவேண்டும்.

(5) தங்களின் பங்கையும் தங்கள் செல்வாக்கையும் தலைவர்கள் குறைத்து மதிப்பிடக்கூடாது. விவேகமாகவும் எச்சரிக்கையுடனும் நடந்து கொள்ள வேண்டும்.

## VII. தலைமை ஏற்று நடத்தும் முறை: (Art of Leadership)

லெனினும் ஸ்டாலினும் தலைமைக் கலை பற்றி விரிவாக எடுத்துரைத்துள்ளனர். அதன்படி தலைவர்கள் இயக்கத்தினின்று மிக முன்பாகவும் செல்லக்கூடாது. பின்பாகவும் செல்லக்கூடாது. மிக முக்கியமான கடமை என்பதைப் புரிந்து கொண்டு இயக்கத்தை முன் செல்லுமாறு உந்த வேண்டும்.

மாசேதுங்கும் தலைமைக்கலை பற்றி விரிவாக எடுத்துரைத்துள்ளார். இதன்படி நிலைமையை ஒட்டுமொத்தமாகக் கணித்து பெரும் பான்மையினரின் கருத்தைக் கணக்கில் எடுத்துக்கொண்டு நம் நேசசக்திகளுடன் சேர்ந்து வேலை செய்ய வேண்டும்.

## VIII வேலை முறைகள்:

(1) போராட்டம் நடக்கும்பொழுது தத்துவரீதியான கோட்பாடுகளையும் கொள்கைகளையும் ஆராயுங்கள்.

(2) நடைமுறை வேலையின் பொழுது (குறிப்பிட்ட பணிகளை நடத்திச் செல்லும் பொழுது) செயற்திட்டங்களை தீர்மானிக்கவும் பரிசீலனை செய்யவும் வேண்டும்.

(3) புரட்சிகர உணர்வுடன் வேலையைச் சிறக்கச் செய்யவும் வேண்டும்.

(4) ஜனநாயகத்தை வளர்க்கவும் விமர்சனம் - சுயவிமர்சனத்தை ஊக்குவிக்கவும் வேண்டும்.

(5) கட்டளைகள் பிறப்பிப்பதைத் தவிர்ந்து பேசி இணங்க வைக்க முயலுங்கள். நெருக்கடி சமயத்தில் மட்டும் கட்டளைகள் இடவும்.

## IX வேலை புரியும் பாணி

(1) லெனின் வேலை புரிந்த விதத்தில் ருசிய மக்களின் வேகமும் அமெரிக்க சமூகத்தின் திறனும் இணைந்திருந்தன.

(2) மாசேதுங் வேலைபுரியும் பாணியில் சீனமக்களின் அடக்கமும், யதார்த்த நிலை உணர்வும், சீன விவசாயியின் எளிமையும் கடும் உழைப்பும், அறிவுஜீவியின் (சிந்தனையாளனின்) கற்றலில் ஆர்வமும் ஆழ்ந்த சிந்தனையும், புரட்சிகரப் படை வீரனின் நெகிழ்ச்சியும், போல்ஷ்விக்கின் உறுதியும் இணைந்துள்ளன.

(3) அன்றாட வேலைகளில் எதிர்ப்படும் சந்தர்ப்பவாதப் போக்குகளை எதிர். தற்பொழுது கடனுக்குச் செய்தல், வாய்ச்சவடால், அகம்பாவம், சடங்காகக் கருதி வேலை புரிதல் போன்ற எல்லாச் செயல்களையும் எதிர். இவை நமது கட்சி மற்றும் படையினரின் உன்னத மரபுகட்கு குந்தகம் விளைவிக்கின்றன.

- சூ என் லாய்

ஏப்பிரல்-22-1943.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அரசியற் குறிப்புகள்

## 1. அகதிகள் வெளியேற்றம்:

தமது அடிப்படை பிரச்சினைகளுக்காகப் போராடப் புறப்பட்ட தமிழ் மக்கள் இன்று சிறீ லங்கா இராணுவத்தின் ஒடுக்குமுறைக்கு முகம் கொடுக்க முடியாமல் தமிழீழப் பகுதிகளில் இருந்து குறிப்பாக மன்னார் மாவட்டத்தில் இருந்து தமிழ்நாட்டிற்கு - இந்தியாவிற்கு - அகதிகளாகச் சென்று கொண்டிருக்கின்றார்கள்.

இன்று தமிழ் மக்கள் இவ்வாறு அகதிகளாக நாட்டைவிட்டு வெளியேறக்காரணம் என்ன? இன்று வரை தமிழீழ மக்கள் தமது பிரச்சினைகளுக்காக தாமே போராட வேண்டும் என உணர்வுபூர்வமாக வளர்க்கப்படவுமில்லை; போராட்டத்தில் உணர்வுபூர்வமாக இவர்கள் ஈடுபடவுமில்லை. மாறாகப் பார்வையாளர்களாக இருந்து கொண்டு தமிழர் விடுதலைக்கூட்டணி, இளைஞர்கள் என மாறி மாறி நம்பிக்கை வைத்துக் கொண்டு இருந்த மக்கள், இரண்டிலுமே நம்பிக்கை அற்றுப்போக இறுதியில் இந்திய அரசில் நம்பிக்கை வைத்து தம் பிரச்சினைகள் தீரும் எனக்காத்துக்கொண்டிருந்தனர். இந்திய அரசும் நேரடியாக இலங்கைத் தமிழர் பிரச்சினையில் தலையிடாது போகவே நம்பிக்கை இழந்த தமிழ்மக்கள் அகதிகளாக தமிழ் நாட்டிற்கு சென்று கொண்டிருக்கின்றார்கள். இப்போக்கிற்கு இசைவாகவே தமிழ் மக்களை வழிநடத்தும்? சில விடுதலை இயக்கங்கள் மக்களைப் போராடத்தூண்டாமல் நம்பிக்கை யூட்டாமல், அவர்களுக்கு அவர்களின் பிரச்சினைகளைப் புரியவைக்காமல் வேற்று நாட்டு உதவிகளில் அதிகநம்பிக்கை ஊட்டுகின்றன அகதிகளாக இந்தியா செல்வதற்கு ஊக்கம் கொடுக்கின்றன; தூண்டுகின்றன.

தமிழீழ மக்கள் இவ்வாறு அகதிகளாக தமிழ்நாட்டிற்குச் செல்வதால் அவர்களது அடிப்படைப்பிரச்சனை தீர்ந்துவிடப் போகின்றதா? இல்லை. மாறாக எதிரிக்குச் சாதகமான பலஅம்சங்களையே கொடுக்கப்போகின்றது. நாட்டில் இருக்கும் மக்களுக்கும் ஆட்பலம் ஆத்மபலம் குறைவதோடு நம்பிக்கை ஈனத்தையும் ஏற்படுத்தும்.

ஏற்கனவே இலங்கையில் இருந்து இந்தியாவுக்குச் சென்ற மலையக மக்கள் இங்கிருந்த வாழ்க்கை வசதி கூட இல்லாத நிலையில் அல்லலுறும் போது, இப்போது அகதிகளாக தமது பிரதேசங்களை விட்டு வெளியேறும் தமிழ் மக்களது வாழ்க்கை இங்கிருப்பதை விட அப்படி ஒன்றும் மேலானதாக இருக்கப் போவதில்லை. மாறாக அவர்கள் எதிர்பார்த்துச் சென்ற வாழ்க்கை அங்கு கிடைக்காத போது வாழ்க்கையில் வெறுப்புக் கொண்டவர்களாக, நம்பிக்கை அற்றவர்களாக எப்பிரச்சினைகளிலும் அக்கறை காட்டாதவர்களாக மாறுவர். (இவ்விடத்தில் நாம் பங்களாதேஷ் பிரச்சினையைப் பார்ப்பது அவசியமாகும். பங்களாதேஷ் விடுதலைப் போராட்டத்தின் போது அகதிகளாக இந்தியாவிற்குள் - அஸ்ஸாம் மாநிலம் - ஓடிவந்த வங்காளிகளின் பிரச்சினை இன்றும் பல இனப் படுகொலைகளினூடே தொடர்ந்து கொண்டிருக்கின்றது.)

முன்பு எவ்வாறு மலையக மக்களின் தலைமைகள் தமது நலனிற்காக, அவர்களது அடிப்படைப் பிரச்சினைகளுக்கு கூட குரல் கொடுக்காது 'தாயகம் செல்வோம்'



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்று கூறி மலையக மக்களின் போர்க் குணம்சத்தை சிதறடித்தனரோ அதே போல் இன்றும், பல்வேறு பிற்போக்கு கும்பல்களும் தமது நலன்களிற்காக தமிழ் மக்களை நாட்டை விட்டு அகதிகளாக வெளியேறுங்கள் எனக் கூறி மக்களின் போர்க் குணம்சத்தை சிதறடிக்கின்றன.

மொத்தத்தில் இவ் அகதிகள் வெளியேற்றத்தினுல் எமது விடுதலைப் போராட்டம் பின்னடிக்கப் படுவதுடன் அந்நியத் தலையீடுகளுக்கும் வழி சமைக்கும். ஓர் அந்நியத் தலையீடு ஏற்படுமாயின் என்ன நோக்கத்திற்காக எமது மக்கள் போராடப் புறப்பட்டனரோ அந் நோக்கம் முற்றுமுழுதாக சிதறடிக்கப்பட்டு தலையிட்டவர்களின் நலன்களைப் பிரதிபலிக்கும் அரசொன்றே உருவாகும். எம் மக்கள் எதிர்பார்த்த மக்கள் நலன் பேணும் அரசிற்கு பதில் அம் மக்களின் முதுகில் சவாரி செய்யும், தமது நலன்களுக்காக எம் மக்களை என்னவும் செய்யத் துணியும் அந்நிய நலன் பேணும் அரசே உருவாகும்.

தமது அடிப்படை உரிமைகளுக்காகப் போராடப் புறப்பட்ட மக்கள், எதிரியின் ஒடுக்குமுறைகளுக்கெல்லாம் முகம் கொடுத்துப் போராடுவதனுல் மட்டுமே தமது உரிமைகளை வென்றெடுக்க முடியும். மக்கள் தாம் போராடுவதன் மூலமே தம் விடுதலையைப் பெறமுடியும்.

எனவே நாம் எமது மக்களுக்கும் போராளிகளுக்கும் சொல்ல விரும்புகின்ருேம்

எங்கள் நிலத்தில்
எங்கள் பலத்தில்
எங்கள் கால்களில்
தங்கி நில்லுங்கள்.
வெல்வோமாயினும் வாழ்வோம்,
வீழ்வோமாயினும் வாழ்வோம்.
நமது பரம்பரை
போர் புரியட்டும்.

## 2. தமிழ் முஸ்லீம் இனக்கலவரம்:

மன்னுரில் இரண்டு முஸ்லீம்கள் பள்ளிவாசல் ஒன்றினுள் வைத்து சமூக விரோதிகள் எனக் கூறிச் சுட்டுக் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து கிழக்கு மாகாணத்தில் தமிழ் முஸ்லீம் இனக்கலவரம் நடந்து முடிந்துள்ளது. இவ் இனக்கலவரத்திற்கு மேற்படி சம்பவத்தைக் காரணமாக இலங்கை அரசு கூறிக் கொண்ட போதிலும் உண்மைக் காரணம் இதுவல்ல.

இன்று தமிழீழப் போராட்டத்திற்கு முஸ்லீம் மக்கள் ஆதரவு கொடுத்து போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இதை உணர்ந்து கொண்ட யூ.என்.பி. அரசும் அதன் நலன் சார்ந்த முஸ்லீம் தரகர்களும் தமிழீழப் போராட்டத்தில் இருந்து முஸ்லீம் மக்களை பிரிக்கும் நோக்குடன் மன்னுர் சம்பவத்தைப் பயன்படுத்தி திட்டமிட்டு இச் சதிச் செயலை நடத்தினர். இச் சதிச் செயலுக்கு இரண்டு தீய நோக்கங்கள் உண்டு. ஒன்று, முஸ்லீம் மக்கள் தமிழீழப் போராட்டத்திற்கு ஆதரவு இல்லை என்று பிரச்சாரம் செய்வதற்கும், இரண்டாவதாக தமிழ் முஸ்லீம் மக்களிடையே சண்டையை, பகையை மூட்டி விடுவதன் மூலம் நாம் எதிரியுடன் மோதுவதை விட்டு ஒருவருடன் ஒருவர் மோதிக் கொண்டால் சிங்கள அரசு தான் லாபமடையலாம் என்பதுமே.

இவ் இனக்கலவரத்தை அடக்குவதற்கென்று தென்னிலங்கையில் இருந்து அனுப்பப்பட்ட அரசபடைகள் இதை மேலும் தூண்டி விட்டன. அப்பாவி மக்களின் மேல் இப் படைகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டு முஸ்லீம் மக்களை தமிழ் தீவிரவாதிகள் கொலை செய்கின்ருர்கள் எனக் கூறிப் பிரச்சாரம் செய்யப்பட்டது. இச் செயல்களின் மூலம் முஸ்லீம் மக்கள் தமிழ் மக்களுக்கெதிராக திருப்பிவிடப் பட்டனர். இக் கலவரத்தினுல் பன்னிரண்டு ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் அகதிகளாக்கப்பட்டனர். காரைதீவுக் கிராமத்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

குடிநீர்க் கிணறுகள் சயனைட் நஞ்சூட்டப் பட்டன. பல கொலைகள் தீவைப்புச்சம்பவங் கள் நடந்தன.

இவ் இனக்கலவரத்திற்கு காரணம் தெற்கில் இருந்து அனுப்பட்ட படைகள் தான் காரணம் என்பதை சிங்கள அரசின் அமைச்சராக உள்ள தொண்டமானே தனது அறிக்கை ஒன்றில் தெரிவித்திருந்தார்.

தமிழ் முஸ்லீம் கலவரத்தை அடக்கு வதற்கென பலரும் முயற்சிசெய்து கொண் டிருந்தபோது சிங்களஅரசின் அமைச்சர்கள் வெளியிட்ட கருத்துக்கள் அரசின் நோக்கத் தை வெளிக்காட்டியுள்ளது. வெளி நாட்ட மைச்சர் A. C. S. ஹமீத் வெளியிட்ட கருத்தில் ''இஸ்லாம் சமாதானத்தை போ திக்கின்றது. வன்முறையை வெறுக்கின்றது எனவே சமுதாய மாற்றத்தைக் கொண்டு வருவதற்கான வன்முறை மற்றும் புரட்சிகளை இலங்கைமுஸ்லீம்கள் நிராகரிக்கவேண்டும்'' எனக் குறிப்பிட்டார். அத்துலத் முதலி வெளியிட்ட அறிக்கையில் ''பலஸ்தீனியர் களிடம் பயிற்சிபெற்ற தமிழ்தீவிரவாதிகள் முஸ்லீம்களை அழிப்பது மிகவும் ஆச்சரியமாக இருக்கின்றது'' எனக் குறிப்பிட்டார்.

இவ்வாறு அரசு, கலவரத்தை அமை திக்கு கொண்டுவர விரும்பாமல் நீடிக்கச் செய்து தனக்கு சாதகமான பிரச்சாரத்தை மேற்கொண்டது; மேற்கொள்கின்றது. அரசின் இப்பிரசாரத்தைப் பலப்படுத்தும் வகையிலேயே பள்ளிவாசல் கொலைச் சம்பவம் அமைந்துள்ளது. விடுதலை இயக்கங் கள் இதுபோன்ற செயல்களில் ஈடுபடும் போது இவற்றுக்கான காரணங்களை மக்களுக்கு கூறி சமூக விரோதிகளின்செயல் களை அம்பலப்படுத்தி, இடம், காலம் என்ப வற்றைப் பொறுத்தே செயல்பட வேண்டும். (சமுகவிரோதி ஒழிப்பின் மூலம் மட்டும் சமூகவிரோதச் செயல்களை ஒழித்து விடமுடியாது என்பதை இலக்கு நான்காம் இதழில் வெளியிட்டிருந்தோம்.)

இந்நிலையில் சிங்கள அரசின் சதிச் செயலை அம்பலப்படுத்தவும், ஒடுக்கு முறையை முறியடித்து தமிழீழப் போராட் டத்தை வெற்றிக்கு இட்டுச் செல்லவும் அனைத்து ஜனநாயக சக்திகளும் ஒன்றிணைந்து போராடவேண்டியது அவசி யமாகும்.

## 3. விடுதலை இயக்கங்களின் போலிப் பிரச்சாரங்கள்:

ஓர் இயக்கம் தாக்குதல் ஒன்றை நிகழ்த்த அதை இன்னோர் இயக்கம் உரிமை கோரி அறிக்கைவிடுவதும் பின்னர் தாக்கு தல் நிகழ்த்திய இயக்கம் மறுப்பறிக்கைவிட்டு தான் உரிமை கோருவதும் இன்று பழங் கதைகள் ஆகிவிட்டது. இன்று எம் விடுதலை இயக்கங்கள் தாக்குதல் ஒன்றை நிகழ்த்தி விட்டு அதை அளவுக்கதிகமாக மிகைப் படுத்தி அறிக்கை விடுகின்றன. இவை எல்லாவற்றையும் மிஞ்சும் வண்ணம் குறிப் பிட்ட ஒரு விடுதலை இயக்கம் தோல்வியில் முடிந்த ஒரு தாக்குதலை, அத்தாக்குதல் முழு வெற்றியில் முடிந்ததாக இந்தியாவில் அறிக்கை விட்டது.

தாக்குதல்கள் நிகழ்த்துவதும், இராணு வத்தினரையும் சிங்கள மக்களையும் சுட்டுக் கொல்வதும் தான் இயக்கங்களின் வேலை என்று இயக்கங்களும் எமது மக்களும் கருதுகின்றனர். தாக்குதல் நடத்தாத இயக் கங்களை இயக்கங்களாக அங்கீகரிக்க மறுக் கின்ற போக்கு இன்று காணப்படுகின்றது. இந்நிலையில் ஒவ்வொரு இயக்கமும் தன்னைப் புள்ளிவிபரங்களின் அடிப்படையில் பலம் வாய்ந்த பெரிய இயக்கங்களாக காட்டிக் கொள்ளும் போட்டியில் போலியான அறிக்கைகளை இயக்கங்கள் வெளியிடு கின்றன.

இயக்கங்கள் இவ்வாறு தம்மைப்பற்றி தாமே மிகையாக கூறிக்கொள்வதாலும் அறிக்கைகள், பேட்டிகள் கொடுப்பதாலும் இயக்கங்கள்மீது மக்களுக்கு ஒருமாயையை-



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அதீத நம்பிக்கையை ஏற்படுத்தும். இளைஞர்கள் எல்லாம் செய்வார்கள் என்று மக்கள் ஒன்றும் செய்யாது பார்வையாளர்களாக இருந்துவிடுவார்கள். இதில் போராட்டத்தில் இருந்து ஏற்கனவே அந்நியப்பட்டுள்ள மக்களை மேலும் அந்நியமாக்கும் அபாயம் உண்டு. பின் இயக்கங்களின் உண்மை நிலையை மக்கள் அறியும் போது, இயக்கங்களை முற்றாக நிராகரிக்கும் போக்கும், விரக்தியும் நம்பிக்கை ஈனமும் ஏற்படும். இந்நிலையில் மக்கள், போராட்டத்தில் சரணடைந்து போகும் நிலைகூட ஏற்படலாம்.

ஆரம்ப காலங்களில் கூட்டணியின் மேடைபேச்சை மக்கள் நம்பி இருந்துவிட்டு பின் அதன் உண்மை நிலையையும் தன்மையையும்அறிந்தபோதுகூட்டணியைஎவ்வாறு மக்கள் அரங்கில் இருந்து தூக்கி எறிந்தனரோ அவ்வாறு எம்விடுதலை இயக்கங்களுக்கும் ஏற்படலாம். இப்போக்குகள் போராட்டத்தில் பின்னடைவையே ஏற்படுத்தும்.

''ஆயுதங்களையும், வீரசாகசங்களையும் காட்டி மக்களிடம் செல்லாமல் புரட்சிகரக் கருத்துகளுடன் மக்களிடம் செல்லுங்கள். அவ்அடிப்படையில் மக்களைப் புரட்சிக்கு அணி திரட்டுங்கள்.''

## 4. விடுதலை இயக்கங்களுக்கு எதிரான தமிழ் மக்களின் போராட்டங்கள்:

சிங்கள இனவெறி அரசின் குரூரமான இன ஒடுக்குமுறைக்கு முகம் கொடுக்கும் தமிழ்மக்கள் இன்று விடுதலை இயக்கங்களின் அராஜகப்போக்கிற்கும், காடைத்தனத்திற்கும் இன்னொரு புறம் முகம் கொடுக்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு ஆளாகியுள்ளார்கள். பல்வேறு இயக்கங்களின் அண்மைக் கால நடவடிக்கைகளையிட்டு உண்மையான ஒவ்வொரு விடுதலைப் போராளியும் வெட்கமும், வேதனையும் அடையாமல் இருக்க முடியாது. இயக்கங்களின் இம் மோசமான நடவடிக்கைகளை பொறுக்கமாட்டாத மக்கள் இயக்கங்களிற்கெதிராகப் போர்க்கொடி உயர்த்தத் தொடங்கி விட்டார்கள். இவ்வாறு தொடர்ச்சியாக இயக்கங்களுக்கெதிராக போராடிய பல சம்பவங்கள் தமிழீழப் பகுதிகளில் நடைபெற்றுள்ளன.

சில மாதங்களிற்கு முன் வட்டக்கச்சியில் குறிப்பிட்ட இயக்கம் ஒன்றைச் சேர்ந்த தோழர்கள் தகுந்த காரணமின்றி ஒரு பொதுமகனை படுமோசமாகத் தாக்கியதற்கு எதிர்ப்பு தெரிவித்து மக்கள் ஊர்வலம் சென்றனர். அவ் ஊர்வலத்தின் போது ஓ! இயக்கத் தோழர்களே தயவுசெய்து எழுந்தமானமாகச் செயற்படாதீர்கள். ஆயுதத்தை சிங்கள இராணுவத்திற்கும் காட்டிக்கொடுக்கும் கயவர்களுக்கும் எதிராகப் பாவியுங்கள் எனக் கோஷித்த வண்ணம் சென்றனர்.

அண்மையில் தெல்லிப்பளை - வர்த்தலைவிளானில் இன்னோர் இயக்கத்தினர் சமூக விரோதி என பொய்க்குற்றம் சாட்டி இளைஞர் ஒருவரை மிருகத்தனமாகத் தாக்கியதைத் தொடர்ந்து அவ்ஊர் மக்கள் ஒன்று திரண்டு கண்டனம் தெரிவித்து அவ் இயக்கத்தினரை அம்பலப்படுத்தும் நோக்கில் உண்ணாவிரதம் இருக்க ஒழுங்கு செய்தனர். குறிப்பிட்ட இவ் இயக்கத்தினர் தமது தவறை உணர்ந்து மன்னிப்புக் கேட்டதைத் தொடர்ந்து உண்ணாவிரதம் கைவிடப்பட்டது.

யாழ்நகரில் வர்த்தகர்கள் கடத்தப்பட்டதைத் தொடர்ந்து இதற்கு எதிர்ப்பு தெரிவித்து யாழ்நகரில் உள்ள சகல கடைகளும் அடைக்கப்பட்டு ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது இயக்கங்களால் நடத்தப்படும் ஹர்த்தால்கள் போல் இதற்கு குண்டு வெடித்து கடைகள் பூட்டப்பட வேண்டிய அவசியமே இருக்கவில்லை. ஹர்த்தால் முழு அளவில் வெற்றியடைந்து கடத்தப்பட்ட வர்த்தகர்களும் விடுவிக்கப்பட்டனர்.

அண்மையில் ஒரு இயக்கத்தில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் காரணமாக வெளி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யேறிய குழுவைச் சேர்ந்த தோழர் ஒருவர் கடத்தப்பட்டதை அடுத்து திருநெல்வேலியில் பொதுமக்கள் கடத்திய தோழரை விடுதலை செய்யும்படி கோரிக்கை வைத்து உண்ணாவிரதம் இருந்தனர். மக்களின் இப்போராட்டத்தை அடுத்து கடத்தப்பட்ட தோழர்கள் விடுதலை செய்யப்பட்டனர். இவ் உண்ணாவிரதத்தின் போது 'விடுதலை என்ற போர்வையில் இளைஞர்களையும் யுவதிகளையும் மோசம் செய்யாதே' என்ற சுலோகங்கள் எழுதிய அட்டைகளை மக்கள் வைத்திருந்தனர்.

கரவெட்டியில் மண்டான் என்ற இடத்தில்தாழ்த்தப்பட்டமக்கள்,கிராமத்தில் இருந்த தரிசாகக் கிடந்த முடிக்குரிய காணி ஒன்றை செப்பனிட்டு கிராமத்தில் நிலமற்றிருந்த சில குடும்பங்களிற்கு வழங்கினர். இந்தக்காணியை தமக்கு சொந்தம் கொண்டாடிய நிலவுடைமையாளர் இந் நிலத்தைப் பெறமுடியாது போகவே விடுதலை இயக்கமொன்றை நாடினர். ஆயுதமேந்திய இக்குறிப்பிட்ட இயக்கத்தினர் அவ்வூர் மக்களைத் தாக்கி, பின் சிலரைக்கைதுசெய்து கொண்டு சென்றனர். இதற்கு எதிர்ப்பு தெரிவித்து கிராம மக்கள் சென்ற ஊர்வலத்தின் மீது தாக்குதல் நடத்தினர். மக்களின் உறுதியான நடவடிக்கைகள் காரணமாக பின்னர் கைது செய்யப்பட்டவர்கள் விடுவிக்கப்பட்டனர்.

இவை எல்லாவற்றையும் பார்க்கும் போது விடுதலைக்காகப் போராடும் எமது விடுதலை இயக்கங்கள் மக்களுடன் எப்படி நடந்து கொள்கின்றன என்பதைப் புரியக்கூடியதாக உள்ளது. உலக விடுதலை இயக்க வரலாறுகளை எடுத்துப்பார்க்கும் போது அவை எப்படி மக்களுடன் இணைந்திருந்தன என்பதை நாம் அறிந்து கொள்ளலாம். சீனபுரட்சியில் செம்படையின் நீண்ட படை நடப்பில், செம்படையினர் கிராமம் கிராமமாக சென்ற பொழுது, படை வீரர்கள் கிராமத்தை விட்டுச் செல்லும் போது பிரிவைத் தாங்க முடியாத கிராமமக்கள் கண்ணீர் விட்டு அழுததைக் கேள்விப்பட்டிருக்கின்றோம். வியட்நாம் யுத்தத்தில் கிராமமக்களை கொன்றொழிக்கும் போது கூட கெரில்லாக்களைக் காட்டிக் கொடுக்காது பாதுகாத்த மக்களைப் பற்றி படித்திருக்கின்றோம். பொலிவியாவில் சேகுவேரா சுட்டுக் கொல்லப்பட்ட பின்பும் கூட பல விவசாயிகள் அவர் இறந்ததை நம்பாததுடன், பலர் இரவில் தம்மைப் பார்க்க வருவார் என்ற நம்பிக்கையில் இருந்ததுடன், சிலர் இரவில் அவர் வந்துபோவதான பிரமையில் கூட இருந்தனர். இவ்வளவுக்கு சேகுவேரா மக்கள் மனதில் இடம் பிடித்திருந்தார்.

மேற்குறிப்பிட்ட சம்பவங்களிலிருந்து விடுதலைப்போராளிகள்எவ்வாறு மக்களுடன் ஐக்கியப்பட்டிருந்தனர் என்பதையும்பொது மக்களின் நல்வாழ்வில் அக்கறை கொண்டிருந்தார்கள் என்பதையும் புரியக்கூடியதாக உள்ளது.

இன்றைய எமது இயக்கங்களோ மக்களைத் துன்புறுத்துவதுடன் ஆயுதங்கள் மூலம் எதனையும் சாதித்துவிடலாம் என்ற இறுமாப்பில் செயற்படுகின்றனர். இவ்வியக்கத் தோழர்கள், மக்களே உண்மையான வீரர்கள்; வரலாற்றை உருவாக்குபவர்கள்; மக்களின்றி ஒரு சில வீரர்களால் வரலாற்றை உருவாக்க முடியாது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். இதனை உணர்ந்து எதிர் காலத்திலாவது தம்மைத் திருத்திக் கொள்ளாவிடின் மக்களால் இவ் இயக்கங்கள் நிராகரிக்கப்படுவதுடன் வரலாற்றில் குப்பைத் தொட்டியினுள் தூக்கி வீசப்படுவது தவிர்க்க முடியாதது.

இயக்கங்களிற்கெதிரான இம் மக்களின் போராட்டங்கள் அராஜகத்திற்கும், எதேச்சதிகாரத்திற்கும் எதிரான போராட்டம் என்ற வகையில் முற்போக்குக் குணாம்சத்தைக் கொண்டிருக்கும் அதே சமயம் முழு இயக்கங்களையும் நிராகரிக்கும் ஏன் விடுதலையைக் கூட எதிர்க்கும் நிலைக்கும் இட்டுச் செல்லும் அபாயம் உண்டு. எனவே போராளிகள் மக்களுடன் ஐக்கியப்பட்டு எதிரி யார் நண்பர் யார் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். எதிரிக்கெதிராக உண்மையான நண்பர்களை அணிதிரட்டுவதன் மூலமே எமது போராட்டத்தை வெற்றிக்கு இட்டுச் செல்ல முடியும்.

மக்களே வரலாற்றை உருவாக்கும் சக்திகள் என்ற வகையில் பொதுமக்களைச் சார்ந்திருப்போம்!

பொது மக்கள் நல்வாழ்வில் அக்கறை காட்டுவோம்!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழீழத்தின் மீன்பிடி

கொழும்புச் சந்தையை முதன்மைப்படுத்திய மீன்பிடி தொடர்பான புள்ளிவிபரங்கள் கீழே தரப்படுகின்றது. இவை இலங்கை அரசாங்கத்தின் கணிப்பீடே. தமிழ் பிரதேசங்களில் மக்கள் நாளாந்த தேவைகளுக்காக பாவித்த மீன், கருவாடு இதனுள் அடங்காது.

**மீன் (தொகை மெற்றிக் தொன்களில்)**

| ஆண்டு | இலங்கையின் மொ. உற்பத்தி | தமிழ்ப் பிரதேச மொத்த உற்பத்தி | தமிழ் பிரதேச வருமானம் | மொ. உற்பத்தி த. பி. விகிதம் |
|---|---|---|---|---|
| 1979 | 1,48,851 | 81,788 | 64,33,59,723 | 54.94 % |
| 1980 | 1,65,224 | 93,394 | 85,06,83,070 | 56.52 % |
| 1981 | 1,75,074 | 99,343 | 94,86,52,700 | 56.85 % |

**கருவாடு (தொகை மெற்றிக் தொன்களில்)**

| ஆண்டு | இலங்கையின் மொ. உற்பத்தி | தமிழ்ப் பிரதேச மொத்த உற்பத்தி | தமிழ் பிரதேச வருமானம் | மொ. உற்பத்தி த. பி. விகிதம் |
|---|---|---|---|---|
| 1979 | 6,386 | 5,130 | 7,65,91,690 | 80.33 % |
| 1980 | 8,675 | 8,101 | 10,21,88,270 | 93.47 % |
| 1981 | 10,604 | 8,683 | 11,10,26,480 | 81.88 % |

**மீன், கருவாடு ஆகியவற்றின் தமிழ் பிரதேச மொத்த வருமானம்**

1979 - 71,99,51,413 ரூபா
1980 - 95,28,71,340 ரூபா
1981 - 105,96,79,180 ரூபா

மேலே தரப்பட்ட தகவல்களில் இருந்து மீன்பிடித் தொழில் தமிழீழத்தைப் பொறுத்து எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததாகக் காணப்படுகிறது என்பது விளங்குகின்றதல்லவா. இவை கொழும்புச் சந்தையின் நிலைமையே. ஆனால் கொழும்புச் சந்தையினைக் கைப்பற்றுவதற்கான சிங்கள முதலாளிகளின் போட்டியும், கடல் அடங்குச் சட்டத்திற்கு ஒரு காரணமா என்ற ஐயம் இப் புள்ளிவிபரத்தைப் பார்த்த பின்பு ஏற்பட்டுள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஆபிரிக்காவின் பட்டினி மரணங்கள்

அதிகாலைப் பொழுது அம் மக்கள் மனதில் எவ்விதத்திலும் புதிய உற்சாகத்தினையோ, உத்வேகத்தினையோ கொடுக்காமலேயே மலர்கின்றது. எதியோப்பியா எங்கனும் சிதறிக் கிடக்கும் எண்ணற்ற அகதி முகாம்களில் இருந்து தமது உறவினர்களின் உயிரற்ற உடல்களை வெளியே எடுத்துச் செல்கிறார்கள். உணவின்மையால் ஒட்டி உலர்ந்துபோன உடல்களில் இருந்து அதிகாலைக் குளிர் இலகுவாகவே உயிரைப் பறித்து விடுகின்றது. ஒவ்வொரு காலையிலும் ஒவ்வொரு முகாமிலும் இறந்தவர்களின் எண்ணிக்கை ஒரு டஜனைத் தாண்டி விடுகின்றது. இதுவரை எட்டு லட்சத்திற்கும் அதிகமான மக்கள் எதியோப்பியாவில் பட்டினியால் மரணமடைந்துள்ளனர். எண்பது லட்சம் மக்கள் வரட்சியினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

## விரிவடையும் சகாரா

எதியோப்பிய நிலைமை ஆபிரிக்காவைச் சூழ்ந்துள்ள பேராபத்தின் அடையாளமே. பல வருடங்களாகத் தொடர்ச்சியான மழையின்மையால் ஏற்பட்ட வரட்சி சஹாராப் பாலைவனத்தின் பரப்பளவை விரிவடையச் செய்துள்ளது. சஹாராவுக்குத் தெற்கேயுள்ள சாஹெல் பிரதேச நாடுகளான மொரிட்டானியா, மாலி, நைகர், சாட், சோமாலியா, சூடான், கென்யா, சாம்பியா, மொசாம்பிக் என்பன வரட்சியினால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன. இந் நாடுகளில் பயிர்ச் செய்கையானது முழுமையாகக் கைவிடப்பட்டுள்ளதுடன் உணவின்றிப் பட்டினியால் வாடும் கிராம மக்களை உணவு தேடி நகரங்களுக்கு இடம் பெயர வைத்துள்ளது. ஏறக்குறைய நூறு லட்சம் மக்கள் தமது வீடு வாசல்களைக் கைவிட்டு உணவு தேடி அலைகின்றனர். இந் நாடுகளில் மொத்தமாக 500 லட்சம் (50 மில்லியன்) மக்கள் பட்டினியின் காரணமாக 'எவ்விதத்திலும் தவிர்க்கமுடியாத' மரணத்தை எதிர்பார்த்திருக்கிறார்கள். இந்த நூற்றாண்டின் மிக மோசமான வரட்சி ஆபிரிக்காவிலுள்ள 20 நாடுகளைப் பாதித்துள்ளது.

## ஆபிரிக்காவின் இன்றைய நிலை

உலகின் அதி பின்தங்கிய நாடுகளில் முக்கால் பங்கும், கடலுடன் தொடர்பற்று நாலா பக்கமும் நிலத்தினால் அடைப்புற்ற மொத்த நாடுகள் தொகையில் அரைப்பங்கும் ஆபிரிக்கக் கண்டத்தில் காணப்படுகின்றன. ஆபிரிக்க நாடுகளின் மொத்த வெளிநாட்டுக் கடன் 150,000 மில்லியன் அமெரிக்க டொலராகும். தமது ஏற்றுமதிகள் மூலம் கிடைக்கும் வருமானத்தில் காற்பங்கினை வருடாந்தம் வெளிநாட்டு வங்கிக் கடன்களுக்கான வட்டியாக ஆபிரிக்க நாடுகள் செலுத்துகின்றன. இந் நாடுகளின் ஏற்றுமதிப் பொருட்கள் பெருமளவிற்கு விவசாயப் பொருட்களாகவும், மூலப் பொருட்களாகவும் உள்ளதால் உலக சந்தையில் இவற்றின் விலை நிலையற்றதாக உள்ளது. இதனால் ஆபிரிக்க நாடுகள் பெறும் வருமானமும் நிலையற்ற தொகையாகவே உள்ளது. ஏற்றுமதிப் பொருட்களின் 90% வீதமான விற்பனையை பல்தேசிய நிறுவனங்கள் கட்டுப்படுத்துவதும் ஆபிரிக்க நாடுகளின் ஏற்றுமதி வருமானத்தில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. பல நாடுகளின் பிரதான ஏற்றுமதிப் பொருளாக கோப்பியே உள்ளது. உலகச் சந்தையில் 1976இல் நிலவிய கோப்பி விலையின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அரைப்பங்காகவே இன்றைய விலை மட்டம் நிலவுகின்றது.

இதே வேளையில், ஆபிரிக்க நாடுகளின் இறக்குமதிச் செலவுகள் தொடர்ச்சியாக அதிகரித்த வண்ணம் உள்ளன. சாஹெல் பிரதேச நாடுகளின் மொத்த இறக்குமதியின் அளவு 1970இல் 4.4 மில்லியன் தொன்னுகவும் 1980இல் 14 மில்லியன் தொன்னுகவும் காணப்பட்டன. இன்றைய நிலையில் ஆபிரிக்க நாடுகள் தமக்கு அத்தியாவசியமான உணவுப் பொருட்களையே இறக்குமதி செய்யவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. தொடர்ச்சியாக அதிகரித்துவரும் இறக்குமதிச் செலவும், வெளிநாட்டுக் கடன் சுமையும் ஆபிரிக்க நாடுகளை மேலும் மேலும் ஏகாதிபத்தியங்களை நோக்கிய பெயர்வினை அதிகரிக்கச் செய்துள்ளன. இதே வேளையில் பட்டினியால் வாடும் ஆபிரிக்க மக்களின் எண்ணிக்கையும் தொடர்ச்சியாக அதிகரித்துச் செல்கின்றது.

**பட்டினியின்**
**உண்மையான மூலங்கள்**

19ஆம் நூற்றுண்டின் ஆரம்பம் வரை அந்நியருக்கு இருண்ட கண்டமாகத் தோற்றம் தந்த ஆபிரிக்கா இன்று மரணிக்கும் நிலைக்கு எவ்வாறு வந்தடைந்தது? அளவிறந்த வளங்களுடன் கன்னி நிலமாக இருந்த ஆபிரிக்காவும் அதன் மக்களும் இன்று உலக நாடுகளின் கருணைக்காக இரங்கும் நிலை ஏன்?

நூறு வருடங்களின் முன்னர், ஐரோப்பாவின் காலனி ஆதிக்க சக்திகள் ஆபிரிக்காவைத் துண்டாடுவதில் தமக்குள் பெரும் போட்டியிட்டன. தமது நலன்களுக்கு ஏற்ற முறையில் செயற்கையான எல்லைகளை அமைத்துத் தேசங்களை உருவாக்கிக் கொண்டனர். ஆபிரிக்காவின் இயற்கை அமைப்புக்களுடன் இசைந்து வாழ்க்கை முறையை அமைத்துப் பல நூற்றுண்டுகளாக வாழ்ந்து கொண்டிருந்த ஆபிரிக்க மக்களை வற்புறுத்தி அடிபணிய வைத்தனர். அவர்களை அடிமைகளாக்கி ஐரோப்பிய சந்தைகளில் அதிக விலைபெற்ற பயிர்களை உற்பத்தி செய்து கொள்ளை லாபமீட்டினர். சுயதேவைக்காகப் பயிர் செய்து கொண்டிருந்த ஆபிரிக்க விவசாயி ஐரோப்பிய சந்தைக்காகப் பயிர் செய்யத் தொடங்கினுன். கோப்பி, கொக்கோ, நிலக்கடலைப் பயிர்கள், சோளம், கோதுமை போன்ற தானியங்கள் நிலப்பரப்பினை ஆக்கிரமித்துக் கொண்டன. புதிய பயிர்களை அறிமுகப்படுத்திய காலனித்துவம் புதிய பயிர்ச் செய்கை முறைகளையும் புதிய நீர்ப்பாசன முறைகளையும் அறிமுகப்படுத்தியது. ஆபிரிக்காவின் இயற்கை நிலைமைகளுக்குப் பொருத்தமற்ற, முற்றிலும் அந்நியமான ஐரோப்பிய முறைகளைப் பின்பற்றும்படி ஆபிரிக்க விவசாயி நிர்ப்பந்திக்கப்பட்டான். ஆபிரிக்காவில் காலனித்துவ சக்திகளின் நடவடிக்கை பற்றி பேராசிரியர் ஜோஸ் டி கஸ்ட்ரோ பின்வருமாறு குறிப்பிடுகிருர்: ''ஆபிரிக்காவின் நெருக்கடிகளும், பிரச்சினைகளும் ஐரோப்பிய குடியேற்றவாதிகளின் துர்நோக்கங் கொண்ட நடவடிக்கைகளாலேயே ஏற்பட்டன. அக் கண்டத்தின் சாதகமற்ற இயற்கை நிலைமைகளைப் பகுத்தறிவுள்ள மனித நடத்தை மூலம் வெற்றி கொண்டிருக்க முடியும். அல்லது அவற்றின் தர்க்கங்களின் அளவையேனும் குறைத்திருக்க முடியும். வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே வாழ்ந்துவரும் சுதேச மக்களின் அனுபவங்களிலிருந்து ஆபிரிக்காவுக்குத் தேவையான தொழில் நுட்பம் வழங்கப்பட்டிருக்க முடியும். தமது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான சகல வழிமுறைகளையும் அம் மக்கள் அறிந்திருந்தார்கள்.''

ஆபிரிக்காவின் இன்றைய நிலை என்ன? நிலத்துக்கடியிலான நீர் தொடர்ச்சியாக உபயோகிக்கப்பட்டதனுல் நீர் வளம் குன்றிவிட்டது. இடைவிடாத பயிர்ச்செய்கையினுல் ஆபிரிக்க மண்ணினது தன்மை கெடுக்கப்பட்டு விவசாயத்திற்கு உபயோகமற்றதாக்கப்பட்டுள்ளது. காலனித்துவம் ஏற்படுத்திய நோயின் விளைவுகளை ஆபிரிக்க விவசாயியும், மக்களும் இன்று அனுபவிக்கின்றனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆபிரிக்காவின் இன்றைய பட்டினி மரணங்களுக்கு வரட்சியினாலும், நீர் வளங்கள் அருகியதாலும், மக்கட் தொகைப் பெருக்கத்தினாலும், உள்நாட்டு யுத்தங்களினாலும் ஏற்படுத்தப்பட்ட நிலைமையே காரணம் என மேற்குலகச் செய்தி நிறுவனங்கள் அறிவிக்கின்றன. இவற்றைவிட, பல தசாப்தங்களாக ஆபிரிக்காவின் வளங்கள் சூறையாடப்பட்டுள்ளமை, ஆபிரிக்க நாடுகளிடையே ஏகாதிபத்தியங்கள் உருவாக்கியுள்ள கெடுபிடி யுத்தங்கள், ஆபிரிக்காவின், இயற்கை நிலைமைகளுக்குப் பொருத்தமற்ற விதத்தில் மேற்கு நாடுகளாலும், உலக வங்கி போன்ற சர்வதேச நிறுவனங்களாலும் திணிக்கப்படுகின்ற பொருளாதாரக் கொள்கைகள் எனக் காரணிகளை அடுக்கிச் செல்ல முடியும்.

**பட்டினியின் பின்னணியில் அரசியல்**

“உதவி வழங்கும் நாடுகளையும் உதவி பெறும் நாடுகளையும் நான் மன்றாட்டமாகக் கேட்டுக் கொள்கிறேன். உணவை ஒரு அரசியல் ஆயுதமாக்காதீர்கள்” என்கிறார் தன்ஸானிய அதிபர் நியரேரே. ஆனால் மக்களது பட்டினியினதும், மரணங்களினதும் பின்னணியில் அரசியலும் தனது பங்கினை வகிக்கின்றது.

கறுப்பு ஆபிரிக்காவின் மிகப் பலம் வாய்ந்த ராணுவத்தை எதியோப்பியா கொண்டுள்ளது. எதியோப்பிய ராணுவ அரசின் தலைவர் மென்கிற்சு சோவியத் ரஷ்யாவின் கைப்பொம்மை எனக் குற்றம் சாட்டப்படுகின்றது. பட்டினியால் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள எதியோப்பிய மாகாணங்களான எரித்ரியா, ரிக்றே என்பவற்றில் எதியோப்பிய ஆட்சி அதிகாரத்தை எதிர்த்து சுதந்திரப் போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இப்பிரதேசங்களுக்கு உணவுப் பொருட்களைக் கொண்டு சென்று விநியோகிக்க எதியோப்பிய அரசு மறுக்கிறது. எண்பது லட்சம் மக்கள் பட்டினியால் வாடும்போது, 250 மில்லியன் டொலர் செலவு செய்து இராணுவப் புரட்சியின் பத்தாவது ஆண்டு விழாவை அரசு கொண்டாடியது. எதியோப்பிய அரசு தனது வரவு செலவுத் திட்டத்தில் ஏறத்தாழ 35%ஐ பாதுகாப்புக்காக செலவிடுகின்றது. ஒரு நாளைய அதன் யுத்த செலவு பல மில்லியன் ரூபாய்களாகும். “அந்நிய நாடுகளின் கூலிப்படையாக எம்முடன் போர் தொடுப்பவர்களுடன் நாம் சமாதானம் செய்து கொள்ளவோ போர் இடைநிறுத்தம் செய்து கொள்ளவோ தயாராக இல்லை” என எதியோப்பிய வெளிநாட்டமைச்சர் எரித்ரியாவிற்கு உணவு அனுப்ப மறுக்கும் காரணத்தை வெளிப்படுத்துகிறார்.

1984 டிசம்பரில் ரிக்றே பிரதேச மக்களை மரணத்திலிருந்து காப்பாற்றுவதற்காக அவர்களை அண்டை நாடான சோமாலியாவில் உள்ள அகதி முகாம்களுக்குச் செல்லுமாறு விடுதலை அமைப்புக்கள் அறிவித்தன. இதனையடுத்து முகாம்களுக்குக் கூட்டமாகச் சென்ற அகதிகள் மீது ரஷ்யா கொடுத்த விமானங்களைப் பயன்படுத்தி இராணுவ அரசு குண்டுவீச்சு நடத்தியது. இச்சம்பவம் நெருக்கடி நேரத்தில் மேற்கொள்ளப்பட்ட “உறுதிமிக்க நடவடிக்கை” என ரஷ்ய அதிபர் செர்னென்கோ பாராட்டினார். எதியோப்பியா உணவுப் பஞ்சத்தை தீர்க்க உலகநாடுகளிடம் கையேந்தி நிற்கும்போது சோவியத் யூனியனின் உதவி இராணுவ உதவியாகவே இருக்கின்றது.

இதே வேளையில், “நிவாரண உதவி” என்ற ஆயுதத்தின் மூலம் எவ்வாறு சோவியத் சார்பு மென்கிற்சு அரசைப் பலவீனப்படுத்தலாம் என மேற்கு நாடுகளின் ராஜதந்திரிகள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர். ஆபிரிக்காவிற்கு உடனடியாகத் தேவைப்படும் நிவாரணத் தொகையில் மேற்கு நாடுகளின் பங்கு காற்பங்கிலும் குறைவாகவே உள்ளது. மிக மோசமான பஞ்சத்தால் பாதிக்கப்பட்டுள்ள எரித்திரியாவில் 1.5 மில்லியன் மக்களுக்கு உடனடியான உணவுத் தேவை உண்டு. சர்வதேச சமூக சேவை நிறுவனங்கள் நிவாரண உதவிகளை எதியோப்பிய அரசின் மூலம் செய்வதை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விரும்பவில்லை. ஏனெனில் இப்பகுதிகளின் பெரும்பான்மையான பகுதிகள் எரித்திரிய விடுதலை வீரர்களின் கையில் உள்ளதால், நிவாரண உதவிகள் அம்மக்களைச் சென்றடையாது என அவை கருதுகின்றன. சில ஸ்தாபனங்கள் எரித்திரிய மக்கள் விடுதலை முன்னணி மூலம் உணவு வழங்கல் போன்ற உதவிகளைச் செய்கின்றன. வருடாந்தம் 800 பில்லியன் அமெரிக்க டொலர்களை ஆயுதங்களுக்காகச் செலவிடும் உலக நாடுகள், ஆபிரிக்காவிற்கு உடனடித் தேவையான 1.5 பில்லியன் டொலர்களை வழங்கத் தயங்குகின்றன. அமெரிக்க உப ஜனாதிபதி ஜோர்ஜ்புஷ் பின்வருமாறு கூறுகிறார்; ''எதியோப்பியாவின் இறைமையையும் பிரதேச ஒருமைப்பாட்டையும் நாம் மதிக்கிறோம். ஆனால் எதியோப்பிய அரசு எமது கோரிக்கைளுக்கு மௌனம் சாதிப்பதை எம்மால் அனுமதிக்க முடியாது''.

எரித்ரியா, ரிக்றே மாகாணங்களில் இருந்து விவசாயிகள் தெற்கு நோக்கி இடம் பெயர்வதை எதியோப்பிய அரசு ஊக்குவிக்கின்றது. விவசாயத்திற்கு பொருத்தமற்ற இடங்களிலிருந்து விவசாயிகளை வரட்சி குறைந்த இடங்களுக்கு இடமாற்றுவதாக அரசு கூறிய போதிலும், மேற்கு நாட்டு அவதானிகளும், சில நிவாரண உதவி நிறுவனங்களும் இதனை ஒரு அரசியல் நடவடிக்கை எனக் குற்றம் சாட்டுகின்றனர். மக்களை இடம்பெயரச் செய்வதன் மூலம் எரித்ரிய விடுதலைப் போராட்டத்தினை நசுக்கவே அரசு திட்டமிட்டுள்ளதென அவர்கள் கூறுகின்றனர்.

**எதிர்கால நிலைமை**

காற்றின் திசை மாறி, வானத்தின் நிறம் மாறி, மழை பொழியும் நாளை எதிர் பார்த்து ஆபிரிக்க மக்கள் அண்ணாந்து பார்த்துக் கொண்டிருக்கும் இந்நிலையில் அவர்களுடைய எதிர்காலம் பற்றிய வினா ஒவ்வொருவர் மனத்திலும் எழுகின்றது. நீண்ட காலத்தின் பின்னரேனும் ஆபிரிக்கா அபிவிருத்தி அடைவதற்கான வாய்ப்புக்கள் மிகவும் மங்கலாகவே உள்ளன. எதியோப்பிய அரசு கடந்த ஆண்டு தயாரித்த ஒரு பொருளாதாரத் திட்டத்தின்படி, 1994க்கு முன்னர் அந்நாடு எவ்விதத்திலும் தானியத்தில் தன்னிறைவு காணமுடியாது எனக் கூறுகின்றது. உலக வங்கி தனது அறிக்கையில் ஆபிரிக்காவில் இன்று காணப்படும் நெருக்கடி நிலை 1986 வரை தொடர்வதைத் தடுக்க முடியாது எனவும் கூறுகின்றது.

எவ்வாறாயினும், ஆபிரிக்க மரணங்களைத் தடுத்து நிறுத்தத் தேவையான உணவு இன்று உலகில் நிறைந்துள்ளது. ஆனால் உணவு அரசியல் ஆயுதமாக்கப்படுவதாலும், பட்டினியின் மூலமேனும் மூன்றாம் உலக நாடுகள் தம்மிடம் தங்கியிருக்கும் நிலையை ஏகாதிபத்தியங்கள் பேணிக்கொள்ள விரும்புவதாலும் பட்டினி நிலை தொடர்கின்றது. ஆபிரிக்க மக்கள் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டங்களை ஆரம்பிப்பதன் மூலமும், காலனி ஆதிக்கங்கள் விட்டுச் சென்ற நாட்டு எல்லைகளை மறுசீரமைப்பதின் மூலமுமே பட்டினி மரணங்கள் தொடர்ந்து நடைபெறாமல் தடுக்க முடியும். மேற்குலகிலும், ஏகாதிபத்தியங்களிலும் தங்கியிருக்கும் ஒழுங்குமுறையை மறுத்து, ஆபிரிக்க மக்கள் புதியதொரு சர்வதேச பொருளாதார ஒழுங்குமுறையை நோக்கிய பயணத்தின் மூலமே ஆபிரிக்கா மீண்டும் உயிர்ப்படைய முடியும். O

*தலைவர்கள் வருவார்கள் - போவார்கள். ஆனால் மக்கள் என்றும் இருப்பவர்கள். மக்கள் தான் சரித்திரம் படைக்கின்றனர். மக்கள் சக்தியை எந்த சக்தியாலும் அழிக்க முடியாது.*

-ஸ்டாலின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தேசிய விடுதலைப் போராட்டமும் புத்திஜீவிகளும்

ஆசியாவில் கற்றோர் கூடிய நாடுகள் இரண்டில் இலங்கையும் ஒன்று என்பதை நம்மவர் பலரும் பெருமையாகச் சொல்லிக் கொள்வதை நாம் கேட்டிருக்கிறோம். இதிலும் இலங்கையில் தமிழ் மக்களிடையே தான் பெரும்பான்மையோர் படித்தவர்கள். இவர்கள் இன்று தமிழ்ச் சமூகத்தில் கணிசமான தொகையினராக இருப்பதுடன் தமிழ்ச் சமூகத்தின் போக்கை தீர்மானிப்பதிலும் முக்கிய பாத்திரம் வகிக்கின்றனர். எந்தச் சமூகப் போராட்டத்தினது வெற்றிக்கும் புத்திஜீவிகளது பங்கும் அவசியமானது. புத்திஜீவிகள் எனப்படுவோர் யாவர்? இவர்களின் குணம்சம் என்ன? இன்றைய சமூகத்தில் இவர்கள் வகிக்கும் பாத்திரம் எத்தகையது என்பவை போன்ற வினுக்களுக்கு விடையளிப்பதன் மூலமே எமது போராட்டத்தில் புத்திஜீவிகளின் பாத்திரத்தை சரியாகக் கணித்துக் கொள்ள முடியும்.

**புத்திஜீவிகளின் உருவாக்கமும் அவர்களது இன்றைய நிலையும்**

பொதுவாக புத்திஜீவிகள் எனப்படுவோர் தமது புத்தியைக் கொண்டு உழைத்து வாழும் மூளை உழைப்பாளிகளே. இன்று அழகாக, பெருமையாக பலர் 'இன்டலெக்சுவல்' என தம்மை அழைத்துக் கொள்வதை கேட்கின்றோம். பொதுவாக புத்திஜீவிகள் எனக் குறிப்பிட்டாலும் மூளை உழைப்பாளிகளாக வாழும் கீழ்மட்டப் புத்திஜீவிகள் மற்றும் குறிப்பிட்ட துறைகளில் நிபுணத்துவம்பெற்றவர்களான உயர்மட்டப் புத்திஜீவிகள் என இருவகையினர் உண்டு. தமிழ்ச் சமூகத்தில் இன்று இரு பிரிவினரும் கணிசமானளவு உள்ளனர். கீழ்மட்டப் புத்திஜீவிகள் எனப்படுவோர் அரச, தனியார் துறைகளில் குறைந்த ஊதியத்திற்கு தமது மூளை உழைப்பை விற்பவர்கள். இவர்கள் அன்றாட வாழ்க்கையை நடத்துவதற்கு கூட கஷ்டப்படுபவர்கள். ஆனாலும் சமூகத்தில் போலி அந்தஸ்தில் வாழும் இவர்கள் மேல் மட்ட வாழ்வுக்காக அங்கலாய்த்துக் கொண்டிருப்பவர்கள். இவர்கள் மேலேயும் போக முடியாமல், கீழே வருவதற்கும் விருப்பு அற்றவர்களாக ஊசலாடுபவர்கள். இவர்களில் கணிசமான பகுதியினர் வருவாய் போதாக்குறைக் காரணமாக வெளிநாடுகளிற்கு சென்றுள்ளார்கள். கீழ்மட்டப் புத்திஜீவிகளில் ஒரு பகுதியினர் வெளிநாடு சென்றாலும் கணிசமானோர் நாட்டிலேயே உள்ளனர். மேல்மட்டப் புத்திஜீவிகள் எனப்படுவோர் குறிப்பாக மருத்துவம், தொழில் நுட்பம், விஞ்ஞானம், சமூக விஞ்ஞானம், கலை இலக்கியம் போன்ற துறைகளில் நிபுணத்துவம் பெற்றவர்கள். இவர்கள் குறிப்பிட்ட துறைகளில் ஆய்வுகளில் ஈடுபடுபவர்கள். இவர்களில் பெரும்பான்மையோர் இன்று நிலவும் சமூக அமைப்பைக் கட்டிக் காப்பதில் பெரும் பங்காற்றுபவர்கள். தமிழீழத்திலுள்ள மேல்மட்டப்புத்திஜீவிகளில்பெரும்பான்மையோர் இன்று நாட்டிலில்லை. அரசின் ஒடுக்குமுறை காரணமாகவும் வாய்ப்பு வசதியை நாடியும் வெளிநாடுகளில் வாழ்கின்றனர்.

இன்றைய முதலாளித்துவ சமூக அமைப்பில் அறிவு என்பது கூட வியாபாரப் பண்டமாகி விட்டது. ஒரு குறிப்பிட்ட சமூகத்தின் பொருளாதார அடிப்படைக்கேற்பவே மேல்கட்டுமானங்களான அரசு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கலாச்சாரம், கல்வி, அரசியல் என்பவை இருக்க முடியும். அந்த வகையிலேயே இன்றைய கல்வியானது இருக்கும் சமூக அமைப்மைக் கட்டிக் காப்பதற்காகவும் அதற்கு சேவை செய்வதற்காகவும் வழங்கப்படுகின்றது. முதலாளித்துவம் லாபத்தை நோக்காகக் கொண்டே உற்பத்தியைச் செய்கின்றது. அது போலவே கல்வியையும் வியாபாரப் பண்டமாகவே முதலாளித்துவம் கருதுகின்றது. இன்றைய முதலாளித்துவ உலகில் புத்திஜீவிகள் வியாபாரப் பண்டமாகி விட்டனர். நிலவும் முதலாளித்துவ சமூக அமைப்பைக்கட்டிக்காக்கவும் அதற்கு விசுவாசமாக சேவை செய்யவும் கூடிய வகையிலேயே புத்திஜீவிகள் உருவாக்கப் படுகின்றனர். மேற்கத்திய முன்னேறிய முதலாளித்துவ நாடுகளில் மேற்கொள்ளப் பட்ட கல்வி முறையே பின்தங்கிய நாடுகளிலும் ஏகாதிபத்தியவாதிகளால் புகுத்தப் பட்டது. எமது நாட்டில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகள் தமது காலனித்துவ ஆட்சியைக் கட்டிக்காக்க அடிமை மனேபாவமுள்ள சேவகர்களாகச் சேவை செய்யக் கூடிய ஊழியர்களை உருவாக்க வேண்டியே கல்வி முறை உருவாக்கப்பட்டது. அன்று காலனித்துவ அரசின் நிர்வாகத்தை கவனிக்கக்கூடிய ஊழியர்களை உருவாக்கும் கல்விமுறையே இருந்தது. பிரிட்டிஷார் நாட்டை விட்டுச் சென்றபின்னர் கூட கல்வி முறையில் ஒரு சில மாற்றங்கள் ஏற்பட்டாலும் அதன் அடிப்படைகள் மாருமல் உள்ளன. புத்திஜீவிகளின் தன்மையில் கூட முன்னைபவிட பாரிய மாற்றங்களை கண்டுகொள்ள முடியவில்லை. இன்று மேற்கத்தய முன்னேறிய முதலாளித்துவ நாடுகளில் புத்திஜீவிகளிடையே சில சுதந்திரமான சிந்தனைப் போக்குகள் உண்டு.

எம் நாடு போன்ற பின்தங்கிய நாடுகளான அரை நிலப்பிரபுத்துவ முதலாளித்துவத்திற்கு முன்னைய உற்பத்தி முறைகளைக் கொண்ட அரைக் காலனிய அல்லது நவ காலனிய நாடுகளில் சுதந்திரமான சிந்தனைப் போக்கை புத்திஜீவிகளிடம் பொதுவாகக் காணமுடியாது. அடிமை மனேபாவ, பழமைவாத சிந்தனைப் போக்குகள் புத்திஜீவிகளிடம் நிரம்பியுள்ளன.

இன்று தமிழீழப் புத்திஜீவிகளிடையே பிற்போக்கான சிந்தனை முறை அதிகமாகக் காணப்படுகின்றது. புத்திஜீவிகளிடையே சாதீய மனேபாவம், சீதனம் பெறும் போக்கு, பெண்ணடிமைத்தனம், மத மூட நம்பிக்கைகள் போன்றவற்றைக் காணக் கூடியதாகவுள்ளது. பலர் விஞ்ஞானத்தை ஒரு பாடமாகக் கற்றுக்கொண்டாலும் விஞ்ஞான பூர்வமான உலகப் பார்வையற்றவர்களாக, கருத்துமுதல்வாதிகளாக உள்ளனர். இவர்களில் பலர் இன்று வேண்டுவதெல்லாம் ஜனநாயக பூர்வமான தமிழீழ மக்கள் குடியரசையல்ல; ஒரு பிற்போக்கு அரசமைப்பையே.

இன்று ஒரு குறிப்பிட்ட துறையில் நிபுணத்துவம் பெற்றவர்களை முதலாளித்துவம் விலைக்கு வாங்குகின்றது. ஓரளவு முற்போக்காகச் சிந்திப்பவர்களைக் கூட முதலாளித்துவம் விலைக்கு வாங்கி விடுவதைக் காணலாம். பல, கலை இலக்கிய கர்த்தாக்கள் இதற்கு உதாரணங்களாகும். ஏகாதிபத்திய நாடுகள் இன்று மூன்றும் உலக நாடுகளில் உள்ள புத்திஜீவிகளை இலகுவில் விலைக்கு வாங்கி விடுகிறது. இந் நாடுகளில் உள்ள கல்வி முறைகள் நேரடியாகவோ, மறைமுகமாகவோ ஏகாதிபத்தியவாதிகளினுல் உருவாக்கப் பட்டதனுல் ஏகாதிபத்திய நலனிற்கு இசைவாகவே உள்ளன. இந் நாடுகளில் கல்விக் கொள்கையை வகுப்பவர்கள் ஏகாதிபத்தியத்தால் வழங்கப் பட்ட கல்வியைப் பெற்றவர்களே. இவர்களிடம் அந்நிய கலாச்சார மோகம் உண்டு. இப்படியானவர்களால் வகுக்கப்படும் கொள்கையடிப்படையில் உருவாக்கப்படும் புத்திஜீவிகளிடம் அந்நிய கலாச்சார மோகம் இருப்பதனுல், இவர்களை மிக இலகுவாக ஏகாதிபத்தியம் விலைக்கு வாங்கிவிடுகிறது. கூடுதல் வருவாய், வசதி வாய்ப்புகள் என்பவை காரணமாக மூன்றும் உலக நாட்டு புத்திஜீவிகள் முன்னேறிய நாடுகளிற்கு படையெடுத்த வண்ணம் உள்ளனர். மூன்றும் உலக நாடுகளில் நிலவும் ஜனநாயக மற்ற சூழலும் இவர்களை நாட்டைவிட்டு வெளியேற வைக்கின்றது. பல மூன்றும் உலக நாடுகளில் புத்திஜீவிகளின் வெளியேற்றம் இன்று பெரும் பிரச்சினையாகியுள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ளது. பின்தங்கிய நாட்டு அரசுகள் இப் புத்திஜீவிகளை உருவாக்கச் செலவழிக்கும் பணம் சாதாரண மக்களிடமிருந்து அற விடப்படும் வரிப்பணமே. தமது நாட்டில் ஒரு புத்திஜீவியை உருவாக்குவதை விட குறைந்த செலவில் பின்தங்கிய நாட்டிலி ருந்து புத்திஜீவிகளை விலைக்கு வாங்குவது ஏகாதிபத்தியவாதிகளுக்கு லாபகரமானது. சில மூன்றும் உலக நாடுகளில் இருந்து 90%க்கு மேற்பட்ட விஞ்ஞானிகள் தொழில் நுட்ப வல்லுனர்கள் நாட்டைவிட்டு வெளி யேறியுள்ளார்கள்.

எமது நாட்டிலிருந்து வெளிநாடுகளிற்கு சென்ற மேல்மட்ட புத்திஜீவிகளில் இரு தரப்பினர் உள்ளனர். ஒரு சாரார் சிங்கள இனவெறி அரசின் ஒடுக்குமுறை காரண மாக நாட்டை விட்டுச் சென்றவர்கள். இவர் களில் பலர் தமது திறமையை சரியான முறையில் பயன்படுத்த முடியாமையாலும் அரசின் பாகுபாடு காரணமாகவும் சுதந்தி ரமாக தொழிலில் இருக்க முடியாமையால் நாட்டைவிட்டுச் சென்றவர்கள். இவர்க ளில் பெரும்பான்மையோர் தேசபக்தியுடை யவர்கள். மறு சாரார் அந்நிய மோகம் கார ணமாகவும், வசதி வாய்ப்புக்காகவும் மட்டும் வெளிநாடுகளிற்கு ஓடியவர்கள். இவர்களிடம் தேசபக்தி குறைவாகவே உள் ளது. இவர்களது விருப்பு ஓர் ஏகாதிபத்திய நலன் பேணும் தமிழீழமே.

## புத்திஜீவிகளின் மனவியல்பு

புத்திஜீவிகளில் பலர் சமூகத்திலிருந்து அந்நியப்பட்டு இருப்பதனுல், மக்களின் அன்ருடப் பிரச்சினைகளைப் பற்றிய தெளி வின்மையால், தமது குறுகிய வட்டத்தில் நின்று உலகைப்பார்ப்பவர்களாகவும் இதன் காரண்மாகபிரச்சினைகளைவிட்டுதமதுகற்பனு ரீதியான முடிவுகளை தீர்வாக முன்வைக்கின் றனர். இவர்கள் உற்பத்தியுடன் சம்பந்த மில்லாதவர்களாக இருப்பது தான் இவர் களை இந் நிலையில் வைத்திருக்கின்றது. இவர்களிடம், மக்களெல்லாம் அறிவிலிகள் எனவும் தாம் முற்றும் அறிந்தவர்களாகவும் எண்ணும் போக்குமுண்டு. உற்பத்தியிலி ருந்தும் சமூகத்திலிருந்தும் அந்நியப்பட் டுள்ளதால் அந்நியமாதலிற்கு ஆளாகியுள் ளதுடன் தமது மனேராஜ்யத்தில் வாழ்ப வர்கள். இதனுல் இவர்களிடையே எவ் வகையான அறிவு ஆற்றல் இருப்பினும் அது மக்களிற்கு பிரயோசனமற்றதாகவே அமைகிறது. மக்களைப் பிரிந்த அறிவாளிக ளால் சமூகத்திற்கு எந்தவித பிரயோசன மும் இல்லை. புத்திஜீவிகளிடையே பெரும் பாலோர் கூட்டான சமூக நடவடிக்கைகளில் இல்லாமையால், அவர்களிடையே ஸ்தா பன ரீதியான செயற்பாடில்லை. இவர்களை கட்டுப்பாடான ஸ்தாபன ரீதியான செயற் பாட்டிற்குள் வைத்திருப்பது கடினமான செயலாகும். சிலர் தனிமனித சுதந்திரம் என்ற போர்வையில் தன்னிச்சைப் போக் கை விரும்புகின்றனர். அத்துடன் எதுவித கட்டுக்கோப்புமற்று அராஜகத்தை விரும் பும் போக்குமுண்டு. இவர்களிடையே மொத்தத்தில் தனிநபர்வாதப் போக்கு, தன்னிச்சைப் போக்கு, தன்னகங்காரம் என் பன காணப்படுகின்றது. இவை எப்போதும் ஸ்தாபனங்களிற்கு ஊறு விளைவிக்கும் போக்குகளாகும். போராட்டம் முன்னுக்குப் போகும் போது உற்சாகமாக பெருமளவில் புத்திஜீவிகள் இயக்கங்களை நோக்கி வருவ தும், போராட்டம் பின்னடையும் போது முழுமையாகப் பின்னடைவதுமான போக்கு புத்திஜீவிகளிடையே காணப்படு கின்றது. இவர்களது அதீத உற்சாகம், சோர்வு என்ற ஊசலாடும் தன்மையை புரிந்து கொண்டாலே இவர்களை சரியான வகையில் சமூகத்திற்குப் பயன்படுத்த முடி யும்.

## புத்திஜீவி எதிர்ப்புப் போக்கு

புத்திஜீவிகள் எதற்கும் உதவாதவர்கள், இவர்கள் எல்லாம் பிற்போக்கானவர்கள் எனும் கருத்துப்போக்கு இன்று பல இயக் கத்தவரிடையேயும் காணப்படுகின்றது. குறிப்பிட்ட ஒரு பிரிவினரால் குறிப்பிட்ட வேலைதான் செய்யமுடியும் என்பதை புரிந் துகொண்டு அவர்களின் பங்களிப்பை சமூகத்திற்கு பிரயோசனப்படக் கூடிய வகையில் பெறுவது தான் சரியானதும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சமூகத்திற்கு நன்மை பயப்பதுமாகும் என்பதைப் புரிந்து கொள்ளல் வேண்டும். நாம் எல்லோரிடமும் ஒரே மாதிரியான வேலைகளை எதிர்பார்க்க முடியாது. அப்படி எதிர்பார்ப்பது சமூகம் பற்றிய சரியான புரிந்து கொள்ளல் இன்மையாலேயே. மக்களுடன் ஐக்கியப்பட வைப்பதன் மூலமே புத்திஜீவிகளின் தன்மையில் மாற்றத்தைக் கொண்டு வருவதுடன் சிறந்த ஊழியர்களாகவும் மாற்ற முடியும் என்பதைப் புரிந்து கொள்ளவேண்டியது அவசியமாகும்.

புத்திஜீவி எதிர்ப்பானது இன்று குட்டிப் பூர்ஷ்வா சிந்தனையுடைய இளைஞர்களிடையேதான் வலுவானதாக உள்ளது. இது ஏற்கனவே எமது சமூகத்தில் நிலவுகின்ற போட்டி, பொறாமை, காழ்ப்புணர்ச்சி என்பவற்றின் வெளிப்பாடாகவே உள்ளது. இப் போக்கினால் புத்திஜீவிகள் மேலும் இயக்கங்களை விட்டு அந்நியப்பட்டு சமூகப் போராட்டங்களை விட்டு ஒதுங்கி வெறும் சுயநலமிகளாக வாழும் அபாயம் உண்டு. எனவே இப்புத்திஜீவி எதிர்ப்பு எனும் தவறான போக்கு களைந்தெறியப் படவேண்டிய ஒன்றாகும். புத்திஜீவிகள் என்றாலே ஏதோ தீண்டத்தகாதவர்கள் எனும் போக்கு இன்று காணப்படுகின்றது. எமக்கு புத்திஜீவிகளின் தேவை நிறையவே உண்டு. எமக்கு தேவை பூர்ஷ்வா புத்திஜீவிகள் அல்ல; புரட்சிகரப் புத்திஜீவிகளே. எனவே பெருமளவில் புரட்சிகரப் புத்திஜீவிகளை நாம் உருவாக்குவதில் அக்கறை செலுத்த வேண்டும்.

## தமிழீழப் போராட்டமும் புத்திஜீவிகளும்

எம் விடுதலை இயக்கங்களிடையே இரண்டு விதமான போக்குகளைக் காணக் கூடியதாக உள்ளது. ஒரு புறம் சில இயக்கங்கள் தாம் செய்யும் நடவடிக்கைகளுக்கு நியாயம் கற்பிப்பதற்காக புத்திஜீவிகளைத் தமது பிரச்சாரகர்களாக கூலிக்கமர்த்தியுள்ளனர். இவர்கள் கூலியாள் மனோபாவத்திலேயே வேலை செய்கின்றனர். இவர்களுக்கு இயக்கத்தின் கொள்கைகளைத் தீர்மானிப்பதிலோ, நடவடிக்கைகளைத் தீர்மானிப்பதிலோ பூரணபங்குபற்றல் இல்லை. வெறுமனே முதலாளித்துவ நிறுவனங்களில் வேலை செய்வது போன்ற வடிவிலேயே வேலை செய்கின்றனர்.

இன்னொருபுறம் திடீரென சில இயக்கங்களில் புத்திஜீவிகள் வந்து தலைமையில் உட்கார்ந்துவிடும் போக்கும் காணப்படுகின்றது. இது புத்திஜீவிகளுக்கு அதிகமுக்கியத்துவம் கொடுப்பதினதும் இயக்க ஊழியர்களினது இயலாமையினதும் வெளிப்பாடாகும். இப் புத்திஜீவிகள் தாமே எல்லாம் தெரிந்தவர்கள் என்ற இறுமாப்பில் திரியும் காட்சியை இன்று காணக்கூடியதாக உள்ளது. இவர்கள் இன்றையமுதலாளித்துவ சிந்தனை வயப்பட்டவர்களாக உள்ளதால், இவர்களிடையே குழப்பமான கருத்துக்கள் நிறைய இருப்பதனால், குழப்பம் விளைவிப்பவர்களாக உள்ளனர்.

இயக்கங்களிடையே புத்திஜீவிகளைப் பாவித்துவிட்டு வெளியே தூக்கி வீசும் போக்கும் உள்ளது. (நாம் இன்னொன்றையும் கவனிக்கத் தவறக்கூடாது. அதாவது புத்திஜீவிகள் சிலரால் நீண்டகாலத்திற்கு ஸ்தாபனக் கட்டுக்கோப்புடன் இயக்கத்திற்குள் இருக்கமுடியாமை) புத்திஜீவிகளை தேவையான நேரம் பாவிப்பதும் பின் வீசுவதுமானபோக்கு, மிகமோசமானதும் சந்தர்ப்பவாதமானதுமாகும்.

இன்று வெளிநாடுகளில் வாழும் சில புத்திஜீவிகள் சில விடுதலை இயக்கங்களிற்கு ஆலோசகர்களாக இருந்து கொண்டு, தாமே தமிழீழப் போராட்டத்தை நடத்துபவர்கள் என்ற பிரமையில் வாழ்கின்றனர். இவர்களில் பலர் இன்னொரு இஸ்ரேலை உருவாக்குவது பற்றிக் கனவுகாண்பவர்கள். ஏகாதிபத்திய நாடுகளில் நிலவும் நச்சுக் கருத்துகளால் பாதிக்கப்பட்டவர்கள் என்ற வகையில் இவர்கள் மிகவும் அபாயகரமானவர்கள். பலர் இன்று வெளிநாட்டு உளவுஸ்தாபனங்களின் ஏஜண்டுகளாக தொழிற்படுகின்றனர்.

அத்துடன் வெளிநாடுகளில் இருந்து விடுதலை இயக்கங்களிற்கு பணம் பெற்றுக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொடுக்கும் இடைத்தரகர்களாகவும் செயற்படுகின்றனர். இன்று பல நாடுகளின் விடுதலை இயக்கங்களில் ஏற்படும் குழப்பங்களிற்கு இது போன்றபுத்திஜீவிகள் காரணகர்த்தாக்களாக இருக்கின்றனர்; இருந்துள்ளனர். இன்று **C.I.A., K.G.B.** போன்ற உளவு ஸ்தாபனங்கள் பல புத்திஜீவிகளை விலைக்கு வாங்கி தமது ஏஜண்டுகளாக்கி உள்ளன. இது போன்ற சம்பவங்கள் உலக அரங்கில் அன்றாட நிகழ்ச்சிகளாகி விட்டன. தமிழீழ விடுதலை இயக்கங்களிற்குள்ளும் கூட பல புத்திஜீவிகள் ஏஜண்டுகளாக செயற்படுவதாக சந்தேகிக்க இடம் உண்டு.

## தமிழீழப் போராட்டத்தில் புத்திஜீவிகளின் பங்கும் அவர்களை அணிதிரட்டலும்

இன்றைய விடுதலைப் போராட்டத்தில் மட்டுமல்ல, நாட்டை நிர்மாணிப்பதிலும் புத்திஜீவிகளின் பங்கு இன்றியமையாதது. புத்திஜீவிகளிடம் உள்ள ஆற்றலும் திறமையும் முதலாளித்துவத்தால் பயன்படுத்தப்படுகின்றது. அதனை நாம் சரியான வகையில் பயன்படுத்துவதே நம் முன்னுள்ள கடமையாகும். புத்திஜீவிகளின் உலக நோக்கில் மாற்றத்தைக் கொண்டுவருவதற்கு நாம் முயற்சித்தல் அவசியமானதாகும். பல புத்திஜீவிகள் விஞ்ஞானக்கல்வி கற்றாலும் அதை வெறும் ஏட்டுக்கல்வியாக பார்க்கின்றார்களே ஒழிய நடைமுறைக்கு உதவக்கூடிய வகையில் பயன்படுத்துவதில்லை. விஞ்ஞானம் ஒரு பாடமாக சூத்திரப்பாங்கில் பார்க்கப்படுகிறதேயொழிய விஞ்ஞானபூர்வமான அணுகுமுறை இருப்பதில்லை. புத்திஜீவிகளிடம் விஞ்ஞானபூர்வமான சமூகப் பார்வையை உருவாக்கல் அவசியம். நாம் புத்திஜீகளை புரட்சிகரப் புத்திவிஜீகளாக மாற்றுவதே செய்யவேண்டிய பணியாகும்.

தமது திறமைகளை நாட்டை நிர்மாணிப்பதிலும், உருவாகும் மக்கள் ஜனநாயக அரசின் பொருளாதாரத்தை சோஷலிசப் பொருளாதாரமாக மாற்றும் பணியில் உதவும் வகையிலும் புத்திஜீவிகள் ஸ்தாபனமயப்படுத்தப்படல் அவசியம். எதற்கும் தம்மை சரியான ஸ்தாபனத்துடன் இணைத்துக் கொள்வதுடன் தம்மை ஸ்தாபன ரீதியில் அணிதிரட்டுவதும் அவசியமானதாகும். புத்திஜீவிகளால் மக்களிடம் சிறந்த முறையில் கருத்துக்களை எடுத்துச் சென்று பிரச்சாரம் செய்ய முடியும். இன்று புத்திஜீவிகள் தனிநபர்களாக இருந்து இயக்கங்களிற்கு உதவும் போக்கே காணப்படுகின்றது. எமது ஸ்தாபனங்கள் சூழலிற்கேற்ப புத்திஜீவிகளைப் பயன்படுத்துகின்றனவேயன்றி அவர்கள் ஒரு சமூகப் பிரிவு (வர்க்கம்) என்ற வகையில் அணிதிரட்டப்படவில்லை. தமிழீழ விடுதலைப் போராட்டத்தை மக்கள் ஜனநாயகப் புரட்சியாக மாற்றுவதற்கு பரந்துபட்ட தேசபக்த சக்திகளைக் கொண்ட ஐக்கிய முன்னணி ஒன்றை உருவாக்குவது இன்றியமையாதது. சரியான பாட்டாளி வர்க்கத் தலைமையில் புத்திஜீவிகளை அணிதிரட்டுவதன் மூலமே இது சாத்தியமாகும்.

இன்று நாம் வெளிநாட்டிலுள்ள தேசபக்தியுள்ள தமிழீழ புத்திஜீவிகளையும் சரியான வகையில் இனங்கண்டு அணிதிரட்டுவதில் அக்கறை செலுத்துவது அவசியமாகும்.

புத்திஜீவிகளே!

கற்பதில் உறுதியாகவும், விடாமுயற்சியுடனும் இருந்து கற்றதை சமூகத்தின் பயன்பாட்டிற்கு ஏற்ற வகையில் பயன்படுத்துங்கள்!

மக்களிடம் செல்லுங்கள்!

மக்களிடம் கற்றுக் கொள்ளுங்கள்!

மக்களை அறிவுபூர்வமாக சிந்தித்து செயற்பட வையுங்கள்! O

---

**அட்டைப்படம்:**

படகுகளில் ராமேஸ்வரம் (இந்தியா) சென்றடையும் தமிழீழ அகதிகள்.

(INDIA TODAY March-31-1986)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தேசிய விடுதலைப் போராட்டமா? இனவெறி யுத்தமா?

**அநுராதபுரச் சம்பவம் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் அழியாத ஒரு இரத்தக் கறை!**

அநுராதபுரத்தில் நூற்றுக்குமதிகமான அப்பாவிச் சிங்கள மக்கள் வைகாசி 14ந் திகதியன்று சுட்டுக் கொல்லப்பட்டனர். இதனைத் தொடர்ந்து சிங்கள இனவெறி அரசின் ஊதுகுழலான வானொலியும் பத்திரிகைகளும் இச் சம்பவத்தைப் பெரிதாக விளம்பரப்படுத்தி ஒப்பாரி வைக்கின்றன. இதனைக் காட்டி உலக நாடுகளிடம் உதவி கோரி மன்றாடுகின்றன. பௌத்த சிங்கள இனவாதத்தின் பாதுகாவலர்களான பிக்குகள் ஊர்வலங்கள், உண்ணாவிரதங்கள் நடத்தினர்.

இத் தார்மீகக் காவலர்களுக்கு கடந்த இரண்டு வருடங்களாக பல நூற்றுக்கணக்கில் தமிழ் மக்கள் கொல்லப்பட்டது ஏனோ தெரியவில்லை. (சிங்கள இனவெறி என்ற திரைக்குப் பின் நின்றதனால் இதனை இவர்களால் காண முடியவில்லை.) 1983 ஜூலையில் அப்பாவித் தமிழ் மக்களை இனப்படுகொலை செய்து பூரிப்படைந்த இத் தார்மீகக் காவலர்கள், படுகேவலமாக கோழைத்தனமான முறையில் வெலிக்கடைச் சிறையில் பாதுகாப்பு அற்ற நிலையில் நிராயுதபாணிகளாக இருந்த 53 தமிழீழ விடுதலைப் போராளிகளைக் கொன்றொழித்து அதை வீரமாகப் பறைசாற்றிய கேவலத்தை உலகறியும். நாட்டு மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க திராணியற்ற இவ்வரசும் அதன் பாதுகாவலர்களும் தமிழ் சிங்கள மக்களை மோதவிட்டு அதில் தம்மைப் பாதுகாத்துக் கொண்டனர். இந்த இலட்சணத்தில் இவர்கள் இன்று கண்ணீர் வடிப்பதற்கு எதுவித அருகதையுமற்றவர்கள்.

தமிழ் மக்களாகிய நாம், எமது இழந்த வாழ்விற்காகப் போராடுகின்றோம். எமது ஜனநாயக உரிமைகளுக்காகப் போராடுகின்றோமேயன்றி, இனவெறி அரசு பொய்ப் பிரச்சாரம் செய்வது போல், சிங்கள மக்களுக்கு எந்தவித கேடு விளைவிப்பதோ, அவர்களுக்கு இருக்க வேண்டிய உரிமைகளைப் பறித்தெடுப்பதோ எமது நோக்கமன்று. இதனைச் சிங்கள மக்களுக்குப் புரிய வைக்கக் கூடிய வகையிலேயே எமது போராட்டம் முன்னெடுக்கப்படல் வேண்டும். இதை விடுத்து சிங்கள அரசின் பிரச்சாரத்திற்குத் துணைபோகும் விதத்தில் அநுராதபுரத்தில் இக் கொலைவெறிபிடித்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது மிகக் கேவலமானதும், இனவெறி பிடித்ததும், தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு மாசு கற்பிப்பதுமான செயலாகும். இதனைச் செய்தவர்கள் யாரும் இதுவரை உரிமை கொண்டாடவில்லை. முக்கியமான தமிழீழ விடுதலை இயக்கங்கள் யாவும் இதனைத் தாம் செய்யவில்லை எனப்பகிரங்க மறுப்பு தெரிவித்ததுடன் கண்டனமும் தெரிவித்துள்ளன. சில இயக்கங்கள் இச் செயலை ஒருபுறம் பத்திரிகைகளில் கண்டனம் தெரிவித்துவிட்டு மறுபுறம் நியாயப்படுத்தும் செயலையும் செய்கின்றன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழீழப் போராட்டத்தைப் பாவித்து காலத்தை ஓட்டும் சிலர் இதற்கு நியாயம் கற்பிப்பதையும் உளமகிழ்வதையும் காணக் கூடியதாகவுள்ளது. இவர்களது விருப்பு ஒரு மக்கள் ஜனநாயக அரசல்ல; பிற்போக் கரசமைப்பையே என்பது இதில் இருந்து தெளிவாகின்றது.

திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலையும் இத் தாக்குதலையும் சிலர் ஒப்பிட்டுப் பேசுகின் றனர்; புகழ்கின்றனர். திட்டமிட்ட சிங்க ளக் குடியேற்றம் என்பது அரசினுல் தமிழ் மக்களை ஒடுக்கும் நோக்குடன் திட்டமிட்டு உருவாக்கப்பட்டது. குடியேற்றங்களில் வாழ்பவர்கள் சாதாரண சிங்கள மக்களா யினும், சிங்கள அரசின் பிரதிநிதிகளாகவே பார்க்க முடியும். குறிப்பாக ஹென்ற், டொலர் பண்ணைகளில் குடியேற்றப்பட்ட வர்கள் இனவெறியூட்டப்பட்ட சிங்களக் காடையர்களே. சில சமயங்களில் திட்ட மிட்ட குடியேற்றங்களை பலாத்காரமாக அகற்றுவது தவிர்க்க முடியாததாக இருக் கலாம். அது கூட சிங்கள மக்களுக்கு பிரச் சினைகளை இயலுமானவரை புரியவைக்க முயன்று,முடியாதபட்சத்திலேயே இறுதியில் பலாத்கார வழிமுறைகள் மேற்கொள்ளப் பட முடியும்.

நாம் சிங்கள மக்களுக்கு எமது பிரச் சினையைப் புரியவைக்க ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளோமா? இல்லை என்று தான் சொல்ல முடியும். நாம் சர்வதேசரீதியாக எம்பிரச்சினைகளைப் பற்றி கணிசமான அளவு பிரச்சாரம் செய்துள் ளோம் ஆனுல் அந்த அளவுக்கு, சிங்கள மக்களுக்கு எம்பிரச்சினைகளைப் புரியவைக்க முயற்சிகள் இதுவரை மேற்கொள்ளப்பட வில்லை. இதனுல் பல அப்பாவிச் சிங்கள மக்களும் அரசின் பிரச்சாரத்தை நம்பி இனவாதத்தில் மூழ்கியுள்ளனர்.

முன்பைவிட சிங்கள புரட்சிகர முற் போக்கு சக்திகள் சில (ஒப்பீட்டளவில் இவை பலவீனமாக இருப்பினும் கூட) தமிழீழப் போராட்டத்தின் நியாயமான கோரிக்கை யைப் பிரச்சாரம் செய்யும் இவ் வேளையில் செய்யப்பட்ட இப்படுகொலைகளானது சிங்கள புரட்சிகரச் சக்திகளுக்கு சிக்கலைக் கொடுப்ப துடன் அவர்களை மேலும் சிங்கள மக்களிடம் இருந்து தனிமைப்படுத்தும்; பலவீனப்படுத் தும். முழுச்சிங்கள மக்களையும் அரசின் பின்னுல் அணிதிரட்டவே இச்செயல் உதவி யுள்ளது என்ற வகையில் இச்செயல் பிற் போக்கானதும் எதிர்ப்புரட்சிகரமானது மாகும்.

இரண்டாவது உலகயுத்தத்தின் போது யூத மக்கள் 'நாஜி' ஹிட்லரால் அழித் தொழிக்கப்பட்டபோது, உலகமக்கள் அனு தாபப்பட்டதுடன் யூதர்களுக்கு ஓர் நாடு உருவாவதற்கு உதவியும் ஒத்தாசையும் வழங்கினுர்கள். யூதர்களுக்கு ஓர் நாடு தே வை என உருவாக்கப்பட்ட சியோனிச இயக்கம் இஸ்ரேல் உருவானபின்,தம்முடன் கூட வாழ்ந்த அரேபிய பெண்கள், குழந்தை களைப் படுகொலை செய்ததுடன் பலஸ்தீனி யர்களை நாட்டைவிட்டுத் துரத்தி அகதிக ளாக்கியது. பக்கத்தில் உள்ள அரபு நாடுகளை அச்சுறுத்தி ஆக்கிரமித்தது. இது போன்று நாமும் ஒரு தமிழீழத்தை (இன்னேர் இஸ் ரேலை) உருவாக்க விரும்புகின்ருேமா? அல் லது ஜனநாயக இறைமையுள்ள தமிழீழ அரசொன்றை உருவாக்கப் போராடுகின் ருேமா? இன்னேர் இஸ்ரேலை உருவாக்க கனவுகாணும் பிற்போக்குஎண்ணம்கொண்ட கனவான்கள் அநுராதபுரத்தில் நடந்த படு கொலைகளை ஆதரிக்கலாம்; சந்தோசப்பட லாம். மனிதாபிமானம் கொண்ட எந்த நபரும் இதனை ஆதரிக்க மாட்டார்கள்.

நாம் இக் கொலைவெறி பிடித்த நடவடிக் கையை மிகவும் வன்மையாகக் கண்டிப்ப துடன் சிங்கள மக்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள் கின்ருேம். O

**பிழை திருத்தம்**


| | | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| பக்கம் 27 | பந்தி 3 | மார்ச் மாதம் | மார்ச் 6ந் திகதி |
| பக்கம் 27 | பந்தி 4 | அருள் | அருள் எனப்படும் கி. சந்திரசேகரம் |
| | | கேசவன் | கேசவன் எனப்படும் க. கனகசிங்கம் - |
| | | மே 10ந் திகதி | மே 9-ந் திகதி (மாமா ஜான்) |



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வீர வணக்கம் செலுத்தி நிற்போம்!



தோழர் அமலதாஸ்

**தோழர் அமலன்**

அமலன், தவம் என்று அழைக்கப்படும் மாதகலைப் பிறப்பிடமாகக் கொண்ட தோழர் அமலதாஸ் ஏப்பிரல் 30ம் திகதி தமிழீழத்தில் இருந்து தமிழ் நாட்டிற்கு சென்று கொண்டிருந்தபோது கடலில் ஏற்பட்ட விபத்து ஒன்றில் காலமாகிவிட்டார். தமிழ் மக்கள் ஜனநாயக முன்னணியுடன் இணைந்து செயற்பட ஆரம்பித்த தோழர் அமலன், இணைந்த காலத்தில் இருந்து நம்பிக்கையுடனும், விசுவாசத்துடனும் செயற்பட்டு வந்தார். எந்த தடையையும் எதிர்கொள்ளும் மனஉறுதி படைத்தவர் தோழர் அமலன். ஆரம்பத்தில் பெரும்பாலான இளைஞர்களைப் போல் உணர்ச்சி வேகத்தில் அமைப்பிற்கு வந்தாலும், சுத்த இராணுவக் கண்ணோட்டமுள்ள இயக்கங்களை நாடிச் செல்லாது சரியான மக்கள் இயக்கம் ஒன்றைக் கட்டவேண்டியதன் அவசியத்தை உணர்ந்து எம்முடன் செயற்பட்டு வந்தார். தமிழீழத்திற்கும் தமிழ்நாட்டிற்கும் இடையிலான தொடர்புகளைப் பராமரிப்பதிலும், இயக்க இராணுவ நடவடிக்கைகளில்பங்குகொள்வதிலும் முன்னணியில் நின்று செயற்பட்டுவந்தார். தோழர் அமலன் இயற்கைக்கு எதிரான போராட்டத்துடன் (கடல் தொழில்) தனது வாழ்க்கையை ஆரம்பித்து ஒரு போராளியாக எம்மை விட்டுப் பிரிந்தார். எல்லோருடனும் அன்பாகவும், கலகலப்பாகவும் பழகும் அமலன் இருக்கும் இடம், என்றும் அமைதியாக இருப்பதில்லை; கலகலப்பாகவே இருக்கும்.

அரசியலை கற்பதில் ஊக்கமெடுத்து வந்ததுடன் கிராமங்களிற்குச் சென்று மக்களை அணிதிரட்ட வேண்டும் என்பதை வலியுறுத்தி வந்தார். இவர் இறப்பதற்கு சில தினங்களின் முன்னர் கூட ''நான் நிறைய அரசியல் கற்க வேண்டும்.




தோழர் கலைதாசன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தோழர் அருள்

அமைப்பு, ஊழியர்களுக்கு அரசியல் கல்வி கொடுப்பதில் அக்கறை காட்டுவது போதாது என விமர்சனம் செய்தார். தோழர் அமலனது விமர்சனத்தை ஆதர் சமாகக் கொண்டு சரியான அரசியலை எம் இயக்கத் தோழர்களுக்கு வழங்கி சரியான பாதையில் போராட்டத்தை முன்னெடுப் பதே, அவருக்கு நாம் செய்யும் அஞ்சலி யாகும்.

களத்தில் செல்லும் போதும், கடலில் செல்லும் போதும் தோழர் அமலனை நினைவு கூர்வோம்.

**தோழர் கலைதாசன்**


கடந்த மார்ச் மாதம் இராணுவத்தின ரின் கிராமச் சுற்றிவளைப்பின் போது துன் னாலையைச் சேர்ந்த தோழர் கலைதாசன் இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட் டார். தமிழீழ தேசிய விடுதலை முன்ன ணியுடன் அண்மையில் இணைந்து கொண் டாலும் மிக உற்சாகமாக கிராம மக்களி டம் சென்று வேலை செய்து வந்தவர். குறிப்பாக தாழ்த்தப்பட்ட மக்களிடம் உயர்சாதியினதும், அவர்களுக்குத் துணை போகும் இயக்கங்களினதும் நெருக்கடிகள் மத்தியில் வேலை செய்து வந்தவர். இவருக்கு எமது வீர வணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றோம்.

> நமது உரிமைகளுக்காகப் போரா டும் ஆசையால் ஒன்றுதிரண்டு ஒருவரோடு ஒருவர் பிணைந்து நின்று நாமெல்லாம் நண்பர்கள் என்ற உண்மையை உணர்ந்தா லன்றி, நமது வாழ்வை நாம் போராடிப் பெறமுடியாது.
>
> -கார்க்கி

**தோழர்கள் அருள், கேசவன்**

கரவெட்டி சண்டிக்குளத்தடியைச் சேர்ந்த தோழர்கள் அருள், கேசவன் (மூக்கு மாமா) ஆகிய இருவரும் மே 10ந் திகதி இராணுவத்தினரால் நெல்லியடியில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டனர். எம் அமைப்புக்கு புதிய தோழர்களாக இருந் தாலும், மாணவர்களை அணிதிரட்டுவதி லும், கிராம மக்களிடம் சென்று வேலை செய்வதிலும் தீவிரமாக ஈடுபட்டவர்கள். இவர்களது இந்த இழப்பு ஈடுசெய்யப்பட முடியாது.

தோழர்கள் அருள், கேசவன் ஆகியோ ருக்கு எமது வீர வணக்கத்தைத் தெரிவித் துக் கொள்கின்றோம்.



தோழர் கேசவன்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

இயக்கம் ஒன்றில் இருந்து வெளியேறிய தோழர்கள் சிலர் அதே இயக்கத் தோழர்களால் கடத்தப்பட்டதைத் தொடர்ந்து, அவர்களை விடுதலை செய்யக் கோரி திருநெல்வேலியில், பொது மக்கள் நடத்திய உண்ணாவிரதப் போராட்டம்.

படம் மேலிருந்து கீழ்: 1 - உண்ணாவிரதமிருந்த மக்களின் ஒரு பகுதி
2,3 - அவர்கள் தாங்கியிருந்த சுலோக அட்டைகள்









www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## ஆள்கடத்தல், பயமுறுத்தல், அடாவடித்தனங்களை நிறுத்துங்கள் !

## எதிரிக்கெதிராக உங்கள் துப்பாக்கியைத் திருப்புங்கள் ! !

மாற்று இயக்கத்தவரை கடத்தல், பயமுறுத்தல், இயக்கத்திற்குள்ளே விசாரணை என்ற பெயரில் சித்திரவதை, இரவோடிரவாக கொன்று வெளியே தெரியாமல் மறைத்தல் போன்ற செயல்கள் இன்றைய இயக்கங்களின் நடவடிக்கைகளாகி விட்டன. இதனை எம் மக்கள் முழுமையாக அறிவர். விடுதலை பெற்றுத்தரும் 'எமது பெடியன்கள்' என்று சொன்ன நிலை போய் இன்று அதே பெடியன்களைப் பார்த்து மக்கள் பயப்படும் அளவிற்கு நிலைமை மாறியுள்ளது. இது போன்ற நடவடிக்கைகளையிட்டு பொது மக்கள் பலர் தமக்குள் முணுமுணுத்துக் கொண்டாலும் வெளியே சொல்லத் திராணியற்று இருந்தனர். அந்நிலை மாறி அண்மைக் காலங்களில் பொது மக்களே இயக்கங்களுக்கெதிராக உண்ணா விரதம், ஊர்வலம் என்ற வடிவில் போராட்டம் நடத்தத் தொடங்கியுள்ளார்கள்.

இரண்டு மாதங்களிற்கு முன் தமிழீழ விடுதலைக் கழகத்தினர் தமிழீழ விடுதலைப் புலிகளைச் சேர்ந்தவர்களை கடத்தியதைத் தொடர்ந்து, தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் படைத்துறைச் செயலரை சென்னை தமிழ்த் தகவல் நிலையத்தில் [இந்தியா] வைத்து கடத்திச் சென்றனர். பின்னர் தமிழ்நாட்டுப் பொலிசாரின் தலையீட்டினால் PLOTஇன் படைத்துறைச் செயலர் விடுதலை செய்யப்பட்டார். எமது இயக்கத் தோழர்கள் சிலர் தமிழீழ விடுதலை இயக்கத்தினரால் [TELO] கடத்தப்பட்டு பின்னர் விடுதலை செய்யப்பட்டனர். இந்தியாவில் வேலை செய்யும் எமது இன்னோர் தோழர் மாற்று இயக்கம் ஒன்றினால் கடத்தப்பட்டார். கடத்திய இயக்கத்தினரை சரியாக இனங்காண முடியவில்லை.

இயக்கங்களிற்கிடையேயான பிரச்சினைகள் பேசித் தீர்க்கப்பட வேண்டியவையே. இதை விடுத்து ஆள் கடத்தல், மிரட்டல், சித்திரவதை என்பன மூலம் பிரச்சினைகளை ஒரு போதும் தீர்க்க முடியாது. உண்மையான மக்கள் நலன் பேணும் இயக்கங்கள் ஒரு போதும் இது போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட மாட்டாது. விடுதலை இயக்கங்கள் தமக்குள்ளே மோதிக் கொள்வது எதிரிக்கு சாதகமான விளைவுகளையே ஏற்படுத்தும். தனிநபர்களை அழிப்பதன் மூலம் அவர்களது கொள்கைகளை இலட்சியங்களை அழித்துவிட முடியாது என்பது வரலாற்று உண்மையாகும். மனிதர்கள் அழிக்கப்படலாம். மானுடம் தோற்றதாக வரலாறில்லை. சகல இயக்கத் தோழர்களையும் நாம் கேட்டுக் கொள்வது, இது போன்ற நடவடிக்கைகளுக்கு உங்கள் சக்திகளை நேரங்களை வீண் விரயம் செய்வதை விடுத்து எதிரிக்கெதிரான போராட்டத்தில் உங்கள் சக்திகளை ஒன்று குவியுங்கள் என்பதேயாகும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நான்
# தண்டனை
# கோருகிறேன்

நான்
அழுவதற்கு வரவில்லை - அவர்கள்
விழுந்த இடத்தில்
இன்னும்
உயிரோடு இருப்பவர்களே!
உங்களிடம் பேசத்தான்...
உங்களை நோக்கியும்
என்னை நோக்கியும்
நான்
வேண்டுவது இதுதான்...
இறந்து கிடக்கும்
நம்மவர்கள் பேராலே
கேட்கிறேன்...
தண்டனை அளியுங்கள்!

நமது
தந்தையர் நாட்டு மண்மீது
சிவப்பு ரத்தத்தை
சிதற வைத்தவர்களுக்கு
தண்டனை அளியுங்கள்!

யாருடைய
ஆணையின் பேரில் இந்த
அக்கிரமங்கள் நடந்தனவோ
அந்த துரோகிகளுக்கு
தண்டனை அளியுங்கள்!

இந்த சவங்களின்மீது
சிம்மாசனம் ஏறிய
அந்த துரோகிகளுக்கு
தண்டனை அளியுங்கள்!

மறப்பவர்களுக்கும்
இந்தக் கொடுமைகளை
மன்னிக்கச் சொல்பவர்களுக்கும்
தண்டனை கொடுங்கள்!

நான்
எல்லோருடனும்
கைகுலுக்க விரும்பவில்லை
ரத்தக்கறை படிந்த
கரங்களைத்
தொடுவதற்கே விரும்பவில்லை
நான்
தண்டனை கோருகின்றேன்......!

தூர தேசங்களுக்கு
அவர்களை
தூதுவராய் அனுப்புவதை
அமைதி வரும்வரை
அவர்களை
அறைகளில் அடைப்பதை
நான்
அடியோடு விரும்பவில்லை.

இங்கேயே...
இப்பொழுதே...
திறந்த வெளியிலே
நீதி வழங்குங்கள்!
அவர்களுக்குரிய தண்டனையை
என்
கண் முன்னே
நிறைவேற்றுங்கள்...!

— பாப்லோ நெருடா